# கீரிமலையில் சுரங்கப் பாதை கண்டுபிடிப்பு

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 208
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 22 றஜபு 5 திங்கட்கிழமை (7-9-70)

போன்: 7199
தங்க வைர
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

B. R. C. பெப்ரிக்
நிர் 6, 7, 8, 9
10 — 12
கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

## நிலமட்டத்திற்கு 40 அடி கீழ் செல்லும் மூன்று பிரிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகளுக்காக கீரிமலையில் 'டைனமைட்' வெடி வைத்தபோது பழைய காலத்தில்பாவிக்கப்பட்ட ஒரு சுரங்கப்பாதை கண்டு பிடிக்கப்பட்டது. இச் சுரங்கப் பாதை மூன்று பிரிவுகளாகச் செல்கின்றது.

நிலமட்டத்திலிருந்து 40 அடிக்குக் கீழ் உள்ள இந்தச் சுரங்கப் பாதைக்குள் நேற்று வாலிபர் கோஷ்டி ஒன்று சுமார் இரு மைல் தூரம் சென்றது. அப்பால் செல்வதில் கஷ்டமிருப்பதாகவும், சுவாசிக்க முடியாமலிருப்பதாகவும் அக் கோஷ்டியினர் தெரிவித்தனர்.

கீரிமலை சடையம்மாள் சமாதி ஏற்றத்திற்கு பக்கத்தில் வெடி வைக்கப்பட்டபோதே இப் பாதை காணப்பட்டது. செங்குத்தாகச் செல்லும் இச் சுரங்கப் பாதைக்குள் மரஞ்செடிகள் எதுவும் காணப்படவில்லையென்றும், சில இடங்களில் தண்ணீரும் சேறும் காணப்பட்டதாகவும் அக் கோஷ்டியினர் தெரிவித்தனர்.

நகுலமுனிவர் தவஞ் செய்த பெரியகுகைக்கு இச் சுரங்கப்பாதை செல்வதாகவும் கீரிமலையில் 80 வருடங்களுக்கு முன் வாழ்ந்த பெரியார்கள், தாங்கள் சிறியவர்களாக இருந்தபோது, மெழுகுவர்த்தி தீபத்துடன் இப் பாதையால் குகைக்குச் சென்றதாக கூறியுள்ளதாகவும் கீரிமலையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை குருக்கள் நேற்று தெரிவித்தார்.

இச் சுரங்கப் பாதையின் ஒருவழி நகுலேஸ்வர பாடசாலைக்கு வடக்கில் உள்ள கிடங்கை வந்தடைகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

நகுலேஸ்வர முனிவர் தவஞ்செய்த குகைக்குத் தெற்கில் பரந்த வெளியிருப்பதாகவும் அந்தவெளி கீரிமலையின் வெளவால் புரைக் கிடங்கிற்குச் செல்வதாகவும் மற்றொரு சுரங்கப்பாதை தொண்டமனாறு செல்வச்சந்நிதிக்குச் செல்வதாகவும், மற்றப் பாதை மாவிட்டபுரத் திருகாமையிலுள்ள குமாரவேள் கோவிலுக்குச் செல்வதாகவும், இச் சுரங்கப் பாதை பற்றிப் பழைய கதைகள் இன்றும் கூறப்படுகின்றன.

இளவாலையைச் சேர்ந்த கருகம்பானையில் தேவகன்னிகைகள் இருந்ததாகவும் அவர்கள் இச் சுரங்கப் பாதையைப் பாவித்தார்களென்றும் மாருதப்புரவீகவல்லி தமக்குள்ள குஷ்டரோகம் காரணமாக இப் பாதைவழியாகவே போக்குவரத்துச்செய்துவந்தாரென்றும் பழைய கதைகள் கூறுகின்றன.

# கல்லூரிகளில் மக்கள் குழு அமைக்குமாறு உத்தரவு

## ஊழியர் திடீர் மரணம்
### காரியாலயத்தில் மரியாதை

யாழ்ப்பாணம், திங்கள்

தபாற் தந்தித்தொடர்புப் பகுதியில் கடமையாற்றிய திரு வீ. எஸ். ரணவீரா என்பவர்கடந்த 4ம்திகதி யாழ்ப்பாணம் காரியாலயத்தில் கடமையிலிருந்தபோது மாரடைப்பினுல் மரணமடைந்தார். தபாற்தந்தி ஊழியர்கள் இவரது பூதவுடலை காரியாலய முன்றலில் இதற்கென அமைக்கப்பட்ட பந்தலில்வைத்து இறுதி மரியாதையைச்செலுத்தி சமயாசாரப்படி ஊர்வலமாக எடுத்துச்சென்று அவர் சொந்த ஊராகிய களனிக்கு அனுப்பி வைத்தனர்.

—

## வாகனப்பயிற்சி இயக்கம்

கோட்டை, ஞாயிறு

கண்டி பொலிஸார் வாகனப்பயிற்சி இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். வீதி விபத்துக்களைத் தடுக்கவும் வாகனப் போக்குவரத்து சீராக நடைபெறவும் இந்த இயக்கம் உதவியாக இருக்கும்.

## இந்திரா சென்ற விமானத்தில் வெடிகுண்டு?
### அதிகாரிகள் சோதனையிட்டனர்

புதுடில்லி, செப். 6

லுசாக்காவில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகபிரதமர் இந்திராகாந்தி பயணமான விமானத்தில் வெடிகுண்டிருப்பதாகச் சந்தேகித்ததன் பேரில் அவரது பிரயாணம் சிலமணிநேரம் தாமதமானது.

இன்று காலை லுசாக்கா பயணமாவதற்காக பிரதமர் இந்திராகாந்தி புதுடில்லியிலிருந்து பம்பாய்க்கு பயணமானுர். அங்கிருந்து பகல் 12 மணிக்கு நைரேபிக்கு பயணமானுர். அவர் புறப்பட்ட 10 நிமிடங்களின் பின்னர் அவர் சென்ற விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக ஒருவர் கிளப்பி



பிரதமர் இந்திரா இன்று காலை பம்பாய் வந்துசேர்ந்தார், அவரை மகாராஷ்டிர கவர்னரும், முதலமைச்

## மாணவர் அனுமதியிலுள்ள சிரமம் குறைய வழி

கோட்டை, ஞாயிறு

நாடுபூராவுமுள்ள முதலாந்தர கல்லூரிகளில் விரைவில் மக்கள் கமிட்டிகள் அமைக்கப்படவிருக்கின்றன. கல்வி அமைச்சர் ஜனுப் பதியுதீன் மாஹ்மூத் பிராந்திய கல்வி அதிபதிகளுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைகளில் மாணவர்களை சேர்ப்பதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கவும் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் பற்றி அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரவுமே மக்கள் கமிட்டிகள் பாடசாலைகளில் அமைக்கப்படுகின்றன.

[illegible]க்க வேண்டும். இவர்கள் இ[illegible]சிய வாக்கெடுப்பு [illegible] தெரியப்படுவார்கள் மிகுதி 9 பேரும் பெற்ருர் ஆசிரியர் சங்கம் கூட்டப்பட்டு தெரியப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தில் தெரிவி[illegible]ப்பட்டுள்ளது.

மக்கள் கமிட்டிகளை உடனடியாக அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட சில முக்கிய கல்லூரிகளில் மக்கள் கமிட்டிகளை அமைக்குமாறு வடமாநில கல்வி அதிபதி திரு. சங்கரலிங்கம் கல்லூரி அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். குறிப்பாக முதலாம் வகுப்பு மாணவர்களைச் சேர்ப்பதில் ஏற்படும் சிரமங்களைக் [illegible]றைக்குமுகமாகவே வெகு சீக்கிரமாக இது நடைமுறைக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

உருக்கு கூட்டுஸ்தாபன

திருக்கோணமலை

## இ. போ. ச. 40 ஊழியர் திடீர் இடமாற்றம்

நல்லூர், திங்கள்

திருகோணமலை இ.போ.ச டிப்போவைச் சேர்ந்த 40 ஊழியர்கள் தந்திமூலம் உடனடியாக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றஞ் செய்யப்பட்ட ஊழியர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள பஸ் தொழிலாளர்கழக அங்கத்தவர்கள் என்று தெரியவருகிறது.

இவ்விடமாற்றத்தைத் தொடர்ந்து இம்மாதம் 7-ம் திகதி திருமலையில் அமைக்கப்படவிருந்த மக்கள்கமிட்டிக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்யும் திகதியும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இத் திகதி பின்போடப்பட்டுள்ளதாக இ.போ.ச உதவி அதிபர்

சுவீப்முடிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணமானுர். அங்கிருந்து பகல் 12 மணிக்கு நைரே பிக்கு பயணமானுர். அவர் புறப்பட்ட 10 நிமிடங்க ளின் பின்னர் அவர் சென்ற விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக ஒருவர் கிளப்பி விட்ட வதந்தியின் பேரில் விமானதள அலுவலகத்தர் விமானக்கமாண்டருக்கு தக வல் தெரிவித்தார். பிரதமர் தான் வெடிகுண்டிருப்பதாக நம்பவில்லை எனவும் பிரயாணத்தைத் தொடர லாம் எனவும் கூறினுர் ஆனுல் பந்தோபஸ்து அதி காரிகள் விமானத்தைச் சோதனையிடவேண்டும் என கூறவே விமானம் தளத்திற் குத் திருப்பப்பட்டது. 45 நிமிட நேரம் ஆகாயத்தில் விமானம் வட்டமிட்ட பின் னர் தளத்தை நோக்கி இறங்கியது. இவ்விமானத் தில் 57 பிரயாணிகள் பய ணஞ்செய்தனர். விமா னத்தை அதிகாரிகள் சோதனையிட்டபோது அங்கு வெடிகுண்டு காணப்பட வில்லை சோதனையின் பின் னர் பிரதமர் மற்றுமொரு விமானத்தில் நைரோபிக் குப் பயணமானுர்.

பிரதமர் இந்திரா இன்று காலை பம்பாய் வந்துசேர்ந் தார், அவரை மகாராஷ் டிர கவர்னரும், முதலமைச் சரும் மற்றும் பிரமுகர்களும் வரவேற்று உபசரித்தனர். பிரதமர் சிறிது நேரம் மகா ராஷ்டிரா-மைசூர் எல்லைப் பிரச்னை பற்றி மகாராஷ் டிரா முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடாத்தி ஞர். காலை டில்லியில் தன்னை வழியனுப்பிவைத்த உப ராஷ்டிரபதி, அமைச்சர்கள் ஆகியோரிடம் விடைபெறு கையில், லுசாக்கா உச்சி மகாநாடு, நடுநிலைமை நாடு களின் பல்வேறு பிரச்னை களை தீர்த்துவைக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். கம்போடியா தென் வியட்னும் ஆகியவை களின் அங்கத்துவத்தை ஏற் படுத்துவது பற்றியும் மகா நாட்டுக்கு முதல் நாள் நடை பெறும் வெளிநாட்டு அமைச்சர்கள் மகாநாட்டில் ஆராயப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித் தார்.

... பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் பற்றி அரசா ங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரவுமே மக்கள் கமிட்டிகள் பாடசாலைகளில் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பாடசாலையி லும் தலா 11 பேர் வீதம் மக்கள் கமிட்டியில் நியமிக் கப் படுவார்கள் இதில் 2 ஆசிரியர்கள் அ..கம் வகி ...மிகுதி 9 பேரும் பெற்ருர் ஆசிரியர் சங்கம் கூட்டப் பட்டு தெரியப்பட வேண் டும் என்று கல்வி அமைச் சின் சுற்று நிருபத்தில் தெரி வி..ப்பட்டுள்ளது.

... சம்பந்தமாக மாநில கல்வி அதிபதிகள் முதலா ந்தர பாடசாலைகளின் அதி பர்களுக்கு அனுப்பி வைத் துள்ள சுற்று நிருபத்தில் ...க்குமுகமாகவே வெகு சீக்கி ரமாக இது நடைமுறைக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

அமைச்சர்கள்

## குமாரசூரியரும் ரத்நாயகாவும் 30-ல் வடபகுதி வருவர்

யாழ்ப்பாணம், திங்கள் தபால் மந்திரி திரு. எஸ். குமாரசூரியரும் விளையாட் டுத்துறை மந்திரி திரு. கே. பி. இரத்னயக்காவும் இம் மாதம் 30ம் திகதிகிளிநொச் சித் தொகுதிக்கு உத்தி யோக பூர்வமாக விஜயம் செய்ய விருக்கின்றனர்.

கிளிநொச்சி றெட்றிகோ மைதானத்தில் அன்றைய தினம் நடைபெறும் யாழ். மாவட்ட விவசாய விழாவில் இருமந்திரிகளும், பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.

பரந்தனில்உள்ள அரசாங்க நெற்பண்ணையில்நடந்தடிரா க்டர்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மந்திரி கள் அன்று பரிசில்களை வழ ங்குவார்கள்.

யாழ். மாவட்டத்தி லேயே முதலாவதாகநடை பெற்ற இந்த டிராக்டர் போட்டியை யாழ்மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தி யோகஸ்தர் ஏற்பாடுசெய் திருந்தார்.

உருக்கு கூட்டுஸ்தாபன

## தலைவரும் 3 அதிபர்களும் இராஜிஞமா

கோட்டை, ஞாயிறு

இலங்கை உருக்குக் கூட் டுஸ்தாபனத்தின் தலைவரும் மற்றும் 3 அதிபர்களும் தங்களது இராஜிஞமாக் கடிதங்களை அனுப்பியுள் ளனர்.

கூட்டுஸ்தாபனத்தின் நூற்றுக்கணக்கான அங்கத் தவர்கள் மேற்படி அதிகாரி களை நீக்க வேண்டுமென கிளர்ச்சி செய்ததையிட்டே இவர்கள் இராஜிஞமா செய் துள்ளனர்.

கூட்டுஸ்தாபன தலைவர் திரு. சாள்ஸ் அபேசேகரா அதிபர்கள் திரு பி. பி. மாணிக்கம், திரு கே. வனிக துங்கா, திரு பி.பி.எம்.விஜே துரு ஆகிய நால்வருமே இராஜிஞமாச் செய்தவர்க ளாவர்.

— —

2-வதுகொத்து அரிசியை

## வாங்காது விடலாம்

கோட்டை, ஞாயிறு

இம்மாதம் 26-ம் திகதியி லிருந்து கூப்பனுக்கு வழங் கப்படவிருக்கும் இரண்டு கொத்து அரிசியில் 75 சதம் கொடுத்து வாங்க வேண் டிய இரண்டாவது கொத்து அரிசியை பாவனையாளர் கள் விரும்பினுல்வாங்கலாம் அல்லது வாங்காதுவிடலாம்.

(4-ம்பக்கம் பார்க்க)

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, திங்கள்

நேற்று (6-9-70) இழுக்கப் பட்டதேசியசுவீப் முடிவுகள் விபரம் வருமாறு:

முதலாவது பரிசு

27 Z 0554 ரூபா 86,610

இரண்டாவது பரிசு

02 R 0940 ரூபா 34,644

மூன்ருவது பரிசு

24 G 0463 ரூபா 8,661

தலா ரூபா 433-05 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 27 B 0257 | 11 Q 0743 |
| 26 A 0232 | 24 M 0328 |
| 09 N 0284 | 02 U 0824 |
| 37 U 0764 | 05 X 0734 |
| 31 T 0157 | 04 L 0342 |
| 15 Z 0270 | 06 M 0310 |
| 13 G 0578 | 06 M 0076 |
| 21 X 0988 | 15 V 0457 |
| 30 U 0586 | 23 J 0348 |
| 36 W 0533 | 36 N 0396 |
| 16 D 0536 | 26 C 0854 |
| 37 U 0376 | 27 Y 0905 |
| 13 D 0237 | 01 U 0409 |
| 02 F 0366 | 34 R 0793 |
| 04 F 0947 | 29 G 0972 |
| 02 P 0537 | 27 B 0514 |
| 20 C 0464 | 06 D 0753 |
| 19 K 0992 | 19 N 0431 |
| 31 S 0136 | 23 C 0705 |
| 12 B 0143 | 14 O 0051 |
| 21 E 0154 | 13 F 0126 |
| 34 N 0029 | 36 Q 0843 |
| 16 G 0670 | 22 W 0348 |
| 04 S 0867 | 31 U 0658 |
| 14 R 0229 | 20 Q 0940 |
| 25 V 0780 | 19 O 0788 |
| 03 S 0290 | |
| 15 C 0039 | 15 Z 0466 |
| 35 L 0372 | 25 A 0974 |
| 06 O 0831 | 21 J 0280 |
| 17 S 0324 | 17 H 0226 |
| 32 A 0639 | 17 L 0808 |
| 17 E 0501 | 22 T 0823 |
| 05 N 0384 | 06 W0 146 |
| 26 B 0751 | 15 C 0184 |
| 17 G 0263 | 38 X 0151 |
| 13 R 0069 | 05 V 0442 |
| 04 R 0428 | 28 T 0199 |
| 09 L 0913 | 38 N 0288 |
| 32 B 0539 | 31 F 0041 |
| 17 X 0754 | 06 X 0343 |
| 04 H 0372 | 34 E 0284 |
| 15 R 0262 | 34 F 0314 |
| 35 W 0191 | 24 W 0642 |
| 21 Q 0786 | 14 X 0489 |
| 26 A 0575 | 13 Z 0129 |
| 24 Z 0928 | 29 Q 0330 |
| 21 Q 0455 | 05 H 0315 |
| 10 J 0925 | 05 U 0151 |
| 27 A 0441 | 31 M 0350 |
| 19 G 0205 | |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.)

...டிக்கான நியமனப்பத்திரங் கள் தாக்கல்செய்யும் திகதி யும் ரத்துச் செய்யப்பட் டுள்ளது. இத் திகதி பின்போடப்பட்டுள்ள தாக இ.போ.ச உதவி அதிபர் அறிவித்துள்ளார்.

அனுராதபுரம், கண்டி நாரஹம்பிட்டியா கொழு ம்பு போன்ற இடங்களுக்கு இவ்வூழியர்கள் இடமாற் றஞ் செய்யப்பட்டது சம் பந்தமாக பஸ் தொழிலா ளர் கழகச் செயலாளர்அட் வக்கேட் எம். ஆலாலசுந்த ரம் இ. போ. ச முகாமை யாளருடன் தொடர்பு கொண்டுள்ளார், இம் மாதம் 18-ம் திகதி சகல இ. போ. ச டிப்போக்களுக் கும் அனுப்பப்பட்ட சுற்று நிருபம் ஒன்றில் தற்போ தைக்கு ஊழியர்கள் இட மாற்றஞ் செய்வது நிறுத் தப்பட்டிருப்பதாக அறிவித் திருந்ததாகவும் திருமலை ஊழியர்களின் இடமாற்றம் இதை மீறுவதாக இருப்ப தாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

......

கட்சிக்கட்டளையை

மீறியவர்கள்

## 7பேர்மீது இந்திரா நடவடிக்கை

புதுடில்லி, செப் 6

இந்திராசார்பு காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த ராஜ்ய சபை அங்கத்தவர் 7 பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

மீசாலை மூதாட்டி படு கொலை

# நான்கு சந்தேக நபர் சிக்கினர்; பொலிஸ் நாய் துப்பு துலககியது

## தங்கநகைகள், கைக்கடிகாரம்பணம், வீட்டில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மீசாலையில் மூதாட்டி படுகொலை செய்யப்பட் டது சம்பந்தமாக 4 சந் தேகநபர்கள். பொலிஸா ரின் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர். துப்புத் துலக்குவதற்காக கண்டியிலிருந்து கொண்டு வரப்பட்ட பொலிஸ்நாய் சந்தேகநபர்களின் வீடு களுக்குச் சென்றதைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டனர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த முருகர் வேலுப்பிள்ளையின் (65 வயது) மனைவியான செல்லாச்சியின் படுகொலை சம்பந்தமாக, பதில் நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் ஸ்தலத்தில் விசாரணை நடத் தினுர்.

இக்கொலை சம்பந்தமாகப் பொலிஸாருக்கு நேற்றுச் சில தகவல்கள் கிடைத்திருப் பதாகவும், விரைவில் சந் தேகநபர்கள் மாட்டிக் கொள்வார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி வைத்திய அதிகாரி டாக்டர் ஏ வைத் திலிங்கம் நேற்றுப் பிரேத பரிசோதனை நடத்தினுர் உடம்பில் காயங்கள் இருந்த தாகவும், நெஞ்சு எலும்பு கள் உடைந்திருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப் பட்டது.

கொலையுண்ட மூதாட்டி யின் வீட்டிலிருந்த மெத் தைக்குள் இருந்த ரூபா 850 ரொக்கப் பணத்தை அவ ரது மருமகன் எம். தரும லிங்கம் கண்டெடுத்தார். அத்துடன் ஒரு சோடி தங் கத் தோடு, மோதிரம், காப்பு, கைக்கடிகாரம் ஆகி யவையும் கண்டெடுக்கப் பட்டன.

வீட்டிலிருந்த அலுமாரியி லுள்ள சாமான்கள் சிதறப் பட்டுக்கிடந்தன என்றும் விசாரணையில் தெரிவிக்கப் பட்டது.

நேற்றுப் பிற்பகல் பொலிஸ் நாய், சம்பவம் நடந்த இடத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு காணப்பட்டனர். பொலிஸ் நாய், சம்பவம் நடந்த இடத்திலிருந்து பல வழிகளால் சென்று நான்கு சந்தேகநபர்களின் வீடுகளுக் குச் சென்றது. நூற்றுக் கணக்கான மக்கள், ஆவ லுடன் பொலிஸ் நாயைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர் இச்சம் பவம் பற்றிப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

பதில் நீதிபதி மேல் விசா ரணையை இம்மாதம் 10ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

(கு.வி.ம.)

# கூப்பன் பெறுவதில் நூற்றுக்கணக்கானேர் அவதி

## ஊழியர் பற்றுக்குறை என்கிறுர் அதிகாரி

யாழ்ப்பாணம், திங்கள்

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் புதிய கூப்பன் களைப் பெறுவதில் பலத்த சிரமத்துக்குள்ளாகி வரு கின்றனர். யாழ்ப்பாணம் காரியாதிகாரி கந்தோரில் நாளாந்தம் காணப்படும் ஜனக்கூட்டம் கூப்பன்பெறு வதற்காகவே அங்கு வந்து மணிக்கணக்கில் காத்து ...ற் பதாக அறிகிறேம்.

இது சம்பந்தமாக உண வுக் கட்டுப்பாட்டு பிரிவி... கடமையாற்றும் அதிகாரி ஒருவரிடம் விசாரித்தபோது கூப்பன் வழங்கும் பகுதியில் ஒரே ஒரு ஊழியர் மட்டுமே கடமையாற்றுவதால் இவ் வித தாமதம் ஏற்படுவதா கக் கூறினுர்.

புதிய கூப்பன்களை விநி யோகிப்பதற்கென அண்மை யில் தொழிற்கந்தோர் மூல மாக நியமிக்கப்பட்ட சகல ஊழியர்களையும் அரசாங்கம் திடீரென நிறுத்திவிட்ட தால் பொது மக்களுக்கு குறி த்த காலத்தில் கூப்பன்களை விநியோகிக்க முடியாதிரு ப்பதாக அவர் சொன்னுர் யாழ்ப்பாணம் காரி யாதிகாரி கந்தோரில் கடமையாற்றும் சகல பிரிவு ஊழியர்களும் கூப்பன் விநி யோகிக்கும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோதி லும், கூப்பன்களை வழங்கு வதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் அந்த அதி காரி கூறினுர்.

காணுமற்போன, கிழிந்து போன கூப்பன்களுக்கு, புதிய கூப்பன் எடுக்கத் தவறிய வர்களுக்கும், இலங்கையரல் லாதவர்களுக்குமே தற் போது கூப்பன்கள் வழங்கப் பட்டுவருகின்றன. (தே.நி)

# "விவசாயிகளுக்கு உத்தியோகஸ்தர் ஒத்துழைப்பு நல்க வேண்டும்"

## விவசாய அமைச்சர் வேண்டுகோள்

கோட்டை, ஞாயிறு

"கமத்தொழில்திணைக்கள உத்தியோகத்தர்கள் விவ சாயிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவர் களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். தற்போது இறக்குமதிக்கு 80 லட்சம் ரூபா வருடமொன்றிற்குச் செலவாகிறது. விவசாயி களுக்கு ஒத்துழைப்பு அளிப்பதால் இதில் பெருந் தொகை பணத்தை மீதப் படுத்தலாம்."

கமத்தொழில் திணைக் களத்தில் நடைபெற்ற உதவியாணையாளர்கள் மகா நாட்டில் இன்று உரை யாற்றுகையில் காணி விவ சாய அமைச்சர் திரு. கொப்பேகடுவா மேற்கண்ட வாறு கூறினுர்.

அவர் மேலும் தொடர் ந்து பேசுகையில் கூறியதா வது:

விவசாயிகள் சம்பளம் பெருதவர்கள் என்ற கார ணத்தால் அவர்களைக் கவ னிக்காது விடக்கூடாது. நாட்டுக்கு உணவளிக்கும் கைங்கரியத்தை செய்யும் அவர்களை அவர்களுக்கு அவர்களது தொழிலை முன் னேற்றவேண்டிய உதவி களை செய்யவேண்டும்.

நெல்லைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத் தல், குற்றக்கொடுத்தல் ஆகிய வேலைகளைத் திணைக் கள உத்தியோகஸ்தர்கள் பொறுப்புணர்ச்சியோடு செய்யவேண்டும். மதிப்பீட் டில் தவறுகள் ஏற்படுதல் மன்னிக்கப்படும் எனினும் கவனக்குறைவு, திறமை யின்மை ஆகியன மன்னிக் கப்படமாட்டா. கமத் தொழில் திணைக்கள உத்தி யோகஸ்தர்கள் இவற்றைக் கவனித்து விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கவேண் டும். அப்பொழுதுதான் உணவுக்காக நாம் வெளி நாட்டுக்கு செலவு செய்யும் பணத்தை மீதப்படுத்த லாம்.

## 'டிக்கட் இயந்திரங்கள்'

கோட்டை, ஞாயிறு

பயணச் சீட்டின்றிப் பிர யாணம் செய்யும் இ. போ. ச. பிரயாணிகள் மேல் நட வடிக்கையெடுக்க இலங்கை போக்குவரத்துசபை தீர்மா னித்துள்ளது.

அநேகர் பிரயாணச் சீட்டி ன்றிப் பிரயாணம் செய்வ தால் வருடமொன்றிற்கு ஆயிரக்கணக்கான ரூபாய் இ. போ. சவுக்கு நஷ்டமேற் படுவதாகச் சபை தெரிவித் துள்ளது. இந்த நஷ்டத் தைப் போக்குவதற்கு பிர யாணச் சீட்டின்றி பயணம் செய்பவர்கள் மேல் நடவ டிக்கையெடுப்பதோடு 'டிக் கற் யந்திரங்களை' இறக்கு மதி செய்வதற்கும் சபை தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

சிறு கடன் வசதிகள் நாள் தவணைக்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு: G. A. சின்னத்துரை, எஸ்ரிஎம் இன்டஸ்றி, 1/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 2929

### விற்பனைக்கு

இரண்டு மாத சையிக்ஸ் (Sykes) சேவற் குஞ்சுகள் கிடைக்கும். ஒவ்வொன்றும் ரூபா 3/- இரத்தினசிங்கம், செட்டித்தரை ஒழுங்கை, நெல்லியடி, கரவெட்டி. 2928

காணி!

பரந்தனில் பாசன வசதியுடைய விளைச்சலுள்ள 16 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: தபால்பெட்டி எண் 88, கொழும்பு. 2192

யாழ்ப்பாணம், பலாலி வீதி, இரண்டாம் ஒழுங்கையில் நவீன முறையில் அமைக்கப்பெற்ற வீடும் இரண்டரைப் பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. தரகர் தேவை இல்லை. விபரங்களுக்கு க. தம்பிப்பிள்ளை. 2924

### வகுப்புக்கள்

வகுப்புகள்:
க. பொ. த. (உயர்தர/சாதாரண) வகுப்புக்களுக்கு தூயகணிதம், பிரயோக கணிதம், உயர்கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் பல்கலைக்கழக போதனாசிரியர்களால் நடத்தப்படுகின்றன. விபரங்களுக்கு 269, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். 2917

### தவறிவிட்டது

3-ந் திகதி 12 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் சென்ற பஸ்ஸினுள் ஒரு தொகைப் பணம் காகித உறையுடன் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2930

### 'ஆழிபுரம்'

அம்பன், ஞாயிறு

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள குடத்தனை உபதபாற் கந்தோர் எல்லைக்குட்படவுள்ள குடத்தனை கரையூர் என்னும் கிராமத்தின் பெயர் 'ஆழிபுரம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

'ஈழநாடு' விளையாட்டு விழா

# ரசிகர்களைக் கவர்ந்து கரபந்தாட்டம்

(நமது விளையாட்டு நிருபர் 'தேவா')

யாழ்ப்பாணம், திங்கள்

'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் கரபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டிகள் நேற்றுமுன்தினம், யாழ். மத்திய கல்லூரியின் கரபந்தாட்டத் திடலில் மிகவிமரிசையாக ஆரம்பமானது. இப்போட்டியைப் பெரும் திரளான மக்கள் கண்டு களித்தனர். முதற் போட்டி மாலை 4-30க்கு ஆரம்பமாகிக் கடைசிப் போட்டி இரவு 8 மணிக்கு முடிவடைந்தது.

இப்போட்டியில் முதலில் நடைபெற்ற தம்பாட்டி காந்திஜி, கோப்பாய் விளையாட்டுக்கழகங்களின் ஆட்டமும் இறுதியாக நடைபெற்ற நீர்வேலி யுனைட்டெட், சித்தங்கேணி நேருஜி கழகங்களினதும் ஆட்டங்களும், ரசிப்பாகவும் கடும் போட்டியாகவும் இருந்தன. பார்வையாளர்களின் பாராட்டையும் இக்கோஷ்டியினர் பெற்றுக்கொண்டனர்.

### காந்திஜி வெற்றி

முதற்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும், கோப்பாய் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இப்போட்டி தொடங்கி முடிவடையும் வரை கடும் போட்டியாகவே இருந்தது. இருந்தும் காந்திஜி வீரர்களின் 'மின்னல்' அடிகளை எதிர் கோஷ்டியினரால் சமாளிக்க முடியவில்லை, முதல் ஆட்டத்தில் காந்திஜி கழகம் 14-10 புள்ளிகளால் வென்றது. இரண்டாவது கோப்பாய் கழகத்தினர் பாராட்டக்கூடிய விதத்தில் விளையாடி 14-4 புள்ளிகள் வித்தியாசத்தால் வென்றனர். மூன்றாவது ஆட்டத்தில் யார் வெற்றி பெறுவார்கள் என நிர்ணயிக்க முடியாத அளவில் போட்டி உச்சக்கட்டத்தில் இருந்தது. ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் கோப்பாய் வீரர்கள் சோர்வடைந்ததினால், காந்திஜி கழகத்தினர் 14-8 புள்ளிகளால் வெற்றிபெற்றனர்.

இப்போட்டிக்கு திரு எஸ். சதாசிவம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்

### றெக்கிளமேசன் வெற்றி

இரண்டாவதாக, றெக்கிளமேசன் சனசமூகநிலையத்திற்கும், யாழ்ப்பாணம் சென். ஜோசப் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் ஆட்டம் நடைபெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் சென் ஜோசப் கழகத்தினர், நிலையாக விளையாடி 14-13 புள்ளிகளால் வென்றனர். இந்த ஆட்டத்தில் றெக்கிளமேசன் கோஷ்டியினர் முதலில் கூடுதலான புள்ளிகளை எடுத்திருந்தும், ஈற்றில் எதிர்க்கோஷ்டியினரிடம் தோல்வியடைந்தனர். இதன்பின் நடைபெற்ற இரண்டாவது மூன்றாவது ஆட்டங்களில் றெக்கிளமேசன் கோஷ்டியினர் சாமர்த்தியமாக விளையாடி 14-10, 14-8 புள்ளிகளால் அடுத்தடுத்த வெற்றிபெற்றனர்.

இப்போட்டிக்கு திரு. கந்தவனம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### ஸ்ரீ விநாயகா வெற்றி

நீர்வேலி ஸ்ரீ விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் நீர்வேலி வெற்றிபெற்றது.

இப்போட்டியின் முதல் ஆட்டத்தில் ஸ்ரீ விநாயகர் கோஷ்டி 14-8 புள்ளிகளால் வென்றது. இரண்டாவது ஆட்டத்தில் குருநகர் கழகத்தினர் வேகமாக விளையாடி 14-6 புள்ளிகளால் வெற்றி பெற்றனர். மூன்றாவது நடைபெற்ற ஆட்டத்தில் மீண்டும் விநாயகர் கோஷ்டியினர் 14-6 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றனர்.

இப்போட்டிக்கு திரு. கே. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### கே. கே. எஸ். வெற்றி

கே. கே. எஸ். டெவலப்மன்போட் கழகத்துக்கும், இணுவில் நாவலர் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ஆட்டம் மிகக் குறுகிய நேரத்தில் முடிவடைந்தது. இப்போட்டி தொடங்கி முடி... நடைபெற்ற ரசிப்பான போட்டியில் நீர்வேலி யுனைட்டட் கழகம் வெற்றி பெற்றது.

இப்போட்டி பார்ப்பதற்கு ரசிப்பையும், கவர்ச்சியையும் கொடுத்தபோதிலும் சித்தங்கேணி கோஷ்டியினர் புள்ளிகளைச் சேகரிப்பதில் மிகவும் அவதிப்பட்டதினாலேயே இப்போட்டியில் இவர்கள் தோல்வியடைந்தனர். நீர்வேலி யுனைட்டட் கோஷ்டியினர் முதல் இரு ஆட்டங்களிலும் 14-6, 14-5 புள்ளிகளை அடுத்தடுத்துப் பெற்று வெற்றியைத் தட்டிக்கொண்டனர்.

இப்போட்டிக்கு திரு. எஸ். சதாசிவம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகத்துக்கும், மானிப்பாய் நாவலர் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த ஆட்டத்தில் மானிப்பாய் நாவலர் கழகத்தினர் ஆட்ட நேரத்தில் விளையாட்டுத் திடலுக்கு சமுகம் கொடுக்காததினால் திருநெல்வேலி சிவன் கழகத்தினர் போட்டியில் ஈடுபடாமலே வெற்றியைப் பெற்றுச் சென்றனர்.

## 9-ம் திகதி செற்-அப் ஆரம்பம்

'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் கரபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் 'செட்-அப்' போட்டி இம்மாதம் 9-ம் திகதி யாழ். மத்திய கல்லூரியின் கரபந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது.

இப் போட்டியில் பத்து விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ளுகின்றன.

இவைகளை 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இரு பிரிவாகப் பிரித்து போட்டி நடைபெறும்.

'செட்-அப்' போட்டியின் அட்டவணை பின்வருமாறு:

### குறூப் A

A. வல்வெட்டித்துறை வி. க.
B. சாவகச்சேரி மோகனதாஸ் வி. க.
C. உடுப்பிட்டி நவஜீவனம் வி. க.
D. ஸ்ரீ விநாயகர் நீர்வேலி.
E. பொலிஸ்.

A - பய்ஸ்
B - C: 9-9-70, 5-30 பி.ப. (மத். கல்.)
A - (B/C வெற்றியாளர்): 10-9-70, 6-30 பி ப. (மத். கல்.)
D - பய்ஸ்
E - பய்ஸ்
D - E: 9-9-70, 8-30 பி.ப. (மத். கல்.)
இறுதி: 11 9-70, 7-30 மு ப. (பொ. மை.)

### குறூப் B

F. இராணுவம்.
G. வதிரி பொம்பஸ்.
H. நீர்வேலி யுனைட்டட்.
I. கே. கே. எஸ். யுனைட்டட்.
J. யாழ். கரபந்தாட்ட கழகம்.

F - பய்ஸ்
G - பய்ஸ்
F - G: 9-9-70, 4-30 பி.ப. (மத். கல்.)
H - I: 9-9-70, ...-30 பி.ப. (மத். கல்.)
10-9-70, 7-30 பி.ப.
இறுதி: 11-9-70, 8-30 மு. ப. (பொ. மை.)

### இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

இன்றைய விழாவுக்கு இறைவரி மதிப்பாளர் திரு. க. தனபாலசிங்கம் தலைமை வகிக்கிறார். இன்றைய நிகழ்ச்சிகளில் இசைக் கல்லூரி மாணவிகளின் பாட்டையடுத்து ஸ்ரீமதி ஜான்கிசங்கர ஐயா, செல்விஎஸ். சுப்புலட்சுமி, திரு. ஆர், நடராசா ஆகியோரின் இன்னிசைவிருந்து இடம்பெறும்.

### சந்தை திறக்கப்பட்டது

மானிப்பாய், ஞாயிறு

மானிப்பாய்ப் பட்டின சபையின் புளியடிச் சந்தையை சபையின் முன்னாள் தலைவரும் 6ம் வட்டார உறுப்பினருமான திரு சி. முத்துக்குமாரசாமி திறந்து வைத்தார். சபையின் தற்போதைய தலைவர் திரு சி. இராசேந்திரம் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

இச் சந்தை சிலகாலம் பாவனையில் இல்லாத காரணத்தால் மானிப்பாய் தெற்கு மக்களுக்கு பல வசதியீனங்கள் இருந்து வந்தது. பட்டின சபைத்தலைவரின் விடா முயற்சியினால் திரும்பவும் இச்சந்தை இன்று ஸ்தாபிக்க முடிந்தது என திரு. முத்துக்குமாரசாமி தமது உரையில் குறிப்பிட்டார்.

### திருமுறைப் போட்டி நடத்த முடிவு

தாவடி, ஞாயிறு

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய வருடாந்த கூட்டம் திரு. இ: இராசநாயகத்தின் தலைமையில் நடந்தபோது திருமுறைப் போட்டி ஒன்றை நடாத்தி, பரிசு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது, புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; சி. கனகலிங்கம் உபதலைவர். கு ஆனந்தநடராசா, செயலாளர்: அ இராசையா, உபசெயலாளர்: சி. ஜெயபாலசிங்கம், பொருளாளர்: வே. பரராசசிங்கம் உபபொருளாளர்: இ. மனோகரன். நூலகப் பொறுப்பாளர்: க. ஜெயராஜ், உதவிப் பொறுப்பாளர்: க. சிவராசா, நிர்வாக சபையுறுப்பினர்களாக அ. இரத்தின...

### "தரமற்ற சினிமா சஞ்சிகைகளை தடைசெய்யவேண்டும்"

மாவிட்டபுரம், ஞாயிறு

"இன்றைய மாணவர்களும் இளைஞர்களும் ஒழுக்கத்திற்கு ஊறுவிளைக்கும் நூல்களை வாசிப்பதால் தான் மாணவர்களிடையே ஒழுக்கக்கேடு நிலவுகிறது. இந்த ஒழுக்கக்கேடு நீங்கி நல்ல சமுதாயம் உருவாக வேண்டுமானால் இந்தியாவில் இருந்து வரும் தரமற்ற சினிமாச் சஞ்சிகைளை முற்றாகத் தடை செய்ய வேண்டும்' என வீமன்காமம் இளைஞர் சனசமூக நிலைய வெள்ளிவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

திரு. எஸ், இராசரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கல்விவட்டார வித்தியாதரிசி திரு ச, சோமசுந்தரம் பேசுகையில்: 'நமது இளைஞர்கள் இந்த நாட்டின் நலன்கருதி விவசாயம் போன்ற பயனுள்ளதுறைகளில் இறங்கி நாட்டை முன்னேற்ற உழைக்கவேண்டும்" எனக் கூறினார்.

திரு. எஸ். செல்லத்துரை உட்பட மற்றும்பலர் உரையாற்றினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### பரிசோதனைக் குழு நியமனம்

அம்பன், ஞாயிறு

குடத்தனைக் கிராமசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் சனசமூகநிலையங்களுக்கு வருடாவருடம் ஒதுக்கப்படும் அரசினர் நன்கொடைப் பணம் கடந்த வருடங்களைவிட இவ்வருடம் மிகக் குறைவான தொகையே ஒதுக்கப்பட்டுள்ளதாம். இப்பகுதியில் உள்ள பெரும்பாலான சனசமூகநிலையங்களும் சரியான நிர்வாக முறையில் இயங்காமலும், நன்கொடைப் பணத்தைப் பிரயோசனமற்ற முறையில் செலவு செய்வதாகவும் கிராமசபைத் தலைவருக்குப் பலர் முறைப்பாடு செய்துள்ளதை தொடர்ந்து கிராமசபைத் தலைவர் 7ம், 10ம், 5ம் வட்டாரக் கிராமசபை அங்கத்தவர்களைக் கொண்ட சனசமூகநிலையங்களின் பரிசோதனைக்குழுவை நியமித்துள்ளார்.

இக்குழு இப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு முன்னறிவித்தலின்றி விஜயஞ் செய்யுமெனவும், குழு விஜயஞ்செய்து பரிசோதனை செய்யும் நிலையங்கள் எதுவாக இருந்தாலும், சரியான முறையில் இயங்கவில்லையெனக் குழு சிபார்சு செய்யுமிடத்து நன்கொடைப் பணம் வழங்குவது தடுத்து வைக்கப்படுமெனவும், அதிவிசேஷமாக இயங்கிவரும் ஒரு நிலையத்திற்கு கூடிய நன்கொடைப் பணமும் மற்றைய நிலையங்களுக்கு ஒரேயளவான பணமுமே வழங்கப்படுமெனவும் குடத்தனைக் கிராமசபைத் தலைவர் திரு. வ. துரையப்பா தெரிவித்தார்.

### இங்கு 9ம் திகதி தேர்தல்

உடுப்பிட்டி, ஞாயிறு

வாக்களிப்பு நிலையப் பிர...

### கும்பாபிஷேகம் முடிவுற்றது

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை மாங்கொல்லை ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக விழா கடந்த 3ம் திகதி நடைபெற்றது. கும்பாபிஷேகக் கிரியைகளை கீரிமலை சிவன் கோவில் ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள், மாவை ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் உட்பட மற்றும் பல குருமாரும் நடாத்தி வைத்தனர்.

இதையடுத்து இவ் ஆலயத்தில் தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நிகழவிருக்கிறது.

......

### பிரிவுபசாரம்

தாவடி, ஞாயிறு

கொக்குவில் இந்துக் கல்லூரி உபஅதிபராயிருந்து இளைப்பாறிய திரு. ஏ, ஆர் இராசநாயகத்திற்கு கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும்பிரிவுபசாரம்அளித்தனர். அதிபர் திரு. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபத்தில் பண்டிதை திருமதி ச. அமிர்தாம்பிகை, திருவாளர்கள் சி. வி. இராசசேகரம், எம் கந்தசாமி உட்படப் பலர் ஓய்வு பெறும்உபஅதிபரின் சேவை மற்றும் குணநலன்கள் பற்றிப்பாராட்டிப்பேசினர்.

### கேள்வி விளம்பரம்

மேல்பற்று தெற்கு கிராமசபை

1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ந் திகதி...

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உபதபார் அந்தோர் எல்லைக் குட்படவுள்ள குடத்தனை கரையூர் என்னும் கிராமத்தின் பெயர் 'ஆழிபுரம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கு திரு எஸ். சதாசிவம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி — நாகேஷ் — ஜெயந்தி நடித்த

இரு கோடுகள்



யாழ் - வின்சர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினிகணேசன்; ஜெய்சங்கர், ராஜஸ்ரீ, நிர்மலா

நடித்த

பூவா தலையா



வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி (போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்

★ சௌகார்ஜானகி

★ நாகேஷ் ★ குமாரிசச்சு

சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்

★ கே. பி. சுந்தராம்பாள்

★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

துணைவன்

கதை வசனம் பாலமுருகன்

சங்கீதம் K.V.மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


மன்போட் கழகத்துக்கும், இணுவில் நாவலர் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ஆட்டம் மிகக் குறுகிய நேரத்தில் முடிவடைந்தது. இப்போட்டி தொடங்கி முடிவடையும் வரை ரசிகர்கள் மத்தியில் பெரும் சிரிப்பொலி எழுந்தவண்ணம் இருந்தது. கே. கே. எஸ். டெவலப்மன்போட் கழகத்தினர் முதல் இரு ஆட்டங்களிலும் 14-12, 14-1 புள்ளிகள் வித்தியாசத்தால் அடுத்தடுத்து வெற்றி பெற்றனர்.

இப்போட்டிக்கு திரு. பத்மதாசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

**நீர்வேலி யுனைட்டட் வெற்றி**

நீர்வேலி யுனைட்டட் விளையாட்டுக்கழகத்துக்கும், சித்தங்கேணி நேருஜி விளையாட்டுக் கழகத்துக்குமிடையில்

F - பய்ஸ் | 9-9-70 4-30 பி.ப. (மத்.கல்.)

G - பய்ஸ்

H - 9-9-70 4-30 பி.ப. (மத்.கல்.) | 10-9-70 7-30 பி.ப. (மத்.கல்.)

I

J - பய்ஸ்

11-9-70 8-30 மு. ப. (பொ.மை)

# அடம்பனில் இன்று விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள் அடம்பனில் விளையாட்டமைச்சின் காரியாதிகாரிப் பிரிவின் ஆதரவில், இன்று மாபெரும் விளையாட்டுவிழா நடைபெறுகின்றது.

ஏற்கனவேகாரியாதிகாரிப் பிரிவினால் நடாத்தப்பட்ட, உதைபந்தாட்டம், கிரிக்கொட் போட்டிகளின் இறுதியாட்டங்களும், மெய்வல்லுனர் போட்டியும் மற்றும் பலவிளையாட்டுகளும் இன்று காலை தொடக்கம் மாலை வரை நடைபெறவிருக்கின்றன.

இந்த விளையாட்டு விழாவுக்கு மன்னார் அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

அடம்பன் காரியாதிகாரி திரு. எம். சுப்பிரமணியமும், விளையாட்டமைச்சின் உத்தியோகஸ்தர் திரு. எம். டி. சம்பிராசாவும் இந்த விளையாட்டு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும்மேற்கொண்டுள்ளனர். (தே. நி)


ராஜா – யாழ்ப்பாணம்


(10-30, 2-30,6-30, 9-45

* துடிக்கும் இரத்தம் பேசட்டும்!

* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!

* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!

* உரிமை உடமை காணட்டும்!!!



சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காணவாரீர்.

செம்மீன் ஷீலா, சாரதா, மது, பிரேம்நசீர், திக்குரிச்சி

மற்றும் பலர் நடித்த

இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற

துலாபாரம்

(மலையாளம்)

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)



வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 9-30

போயா, பிரிப்போயா 2-30

எம். ஜி. ஆர் — பத்மினி

நடித்த

ராணி சம்யுக்தா



ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

ஜெமினி-சாவித்திரி

நடித்த

கற்புக்கரசி



MANOHARA

Jaffna

Daily 4-45, 7 & 9-45P.M.

Richard Benjamin

in

GOOD BYE COLUMBUS

[Color]



REGAL JAFFNA

Daily 4-45, 7 &9-45 p.m.

Poya, Pre-poya 4 Shows

Richard Harris

Julie Andrews

in

H A W A I I

(Color)


உபபொருளாளர்: இ. மனோகரன். நூலகப் பொறுப்பாளர்: க. ஜெயராஜ், உதவிப் பொறுப்பாளர்: க. சிவராசா, நிர்வாக சபையுறுப்பினர்களாக அ. இரத்தினசபாபதி, செ. சிவபாலகிருஷ்ணன், வே. மகேந்திரன் ஆகியோரும் தெரியப்பட்டனர்.

## பொலிசில் புகார்

நெல்லியடி, ஞாயிறு

துன்னாலை வடக்கில் கணேசானந்தம் என்பவருக்குச் சொந்தமான கடையொன்றில் இரவில் ஓடுபிரித்து பணமும் பொருட்களும் களவாடப்பட்டுள்ளதாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

## ஆண்டு விழா கொண்டாடுவர்

தாவடி, புதன்

தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்றத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழாவை அடுத்தமாதம் மிக விரிவான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் நடக்கின்றன. விளையாட்டுப் போட்டிகள், பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி, இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 7—9—70

(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 ஆதிபாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம்,, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 மெல்லிசை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## இங்கு 9ம் திகதி தேர்தல்

உடுப்பிட்டி, ஞாயிறு

வாக்களிப்பு நிலையப் பிரச்னை காரணமாகப் பின்போடப்பட்டிருந்த கட்டைவேலிக் கிராமசபையின் 7ம் வட்டாரத்துக்கான (வட்டுவத்தைப்பகுதி) தேர்தல் எதிர்வரும் 9ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மைச் சமூகத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியிலமைந்துள்ள அதிரி வடக்கு மெதடிஸ்தமிஷன் பாடசாலைமுன்னர் வாக்களிப்பு நிலையமாக இருந்து வந்தது. இக்கிராமசபைத் தேர்தலில் இவ்வாக்களிப்பு நிலையம் மாற்றப்பட்டதைத் தொடர்ந்துசிறுபான்மைச்சமூகத்தவர்களும் நியமன எம்.பி. திரு. எம். ஸி சுப்பிரமணியமும் பலத்த ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து இவ்வட்டாரத்திற்கான தேர்தல் பின்போடப்பட்டிருந்தது.

9-ம் திகதி நடைபெறவிருக்கும் இத்தேர்தலில் திருவாளர்கள் எஸ். செல்லப்பா கதிர்காமு மாணிக்கம், செல்லையா வேலும்மயிலும், முருகேசு வல்லிபுரம் ஆகிய நான்கு அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்.

## மேல்பற்று தெற்கு கிராமசபை

1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ந் திகதி வரை ''பரந்தன் கச்சல் கொடி சின்னடம்பன் ரோட்டு'' வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பணமாக ரூபா 60/ செலுத்தியதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் கேள்வி தயாரிக்கப்படவேண்டும். பத்திரப்பணமாக ரூபா 25/-ம் செலுத்தப்படவேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது எனக்குப் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கும் அதே நேரத்தில் வவுனியா உ. உ. ஆணையாளர், அவர்கட்கும் நகல் பிரதியொன்று அனுப்பப்படவேண்டும். 19-9-70 வரையும் பத்திரங்கள் வழங்கப்படும். விபரங்களை எமது அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

சி. உ. செல்லத்துரை,

அக்கிராசனர், ஜே. பி.

கி. ச. அலுவலகம்,

நயினாமடு, நெடுங்கேணி,

5-9-70. 2437


புத்துணர்ச்சி தரும் மனோரம்மியமான குடும்ப டல்க்

ரெமி




வர்த்தகவிசாரணைகளுக்கு:-

அவ்ரா அன் கம்பெனி

19, செட்டியார் தெரு

கொழும்பு ,11

தொலைபேசி: 27211.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ள அபாயம்

# கல்கத்தாவில் 30 லட்சம் மக்கள் பாதிப்பு

## மத்திய பிரதேசத்தில் 177 பேரைக் காணவில்லை

கல்கத்தா, செப். 6

கல்கத்தாவில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் பெருமழையினால் 30 லட்சம் மக்கள் பாதித்துள்ளனர். பல பாதைகளில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. வீதிகள் எங்கும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

கல்கத்தா மாநகரசபைப் பகுதியில் மட்டும் 5 லட்சம் மக்கள் வெள்ளத்தில் பாதிக்கப் பட்டனர். பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

மத்திய பிரதேசத்திலும் கடும் மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. நர்மதாநதி பெருக்கெடுத்துள்ளதால், நகருக்குள் வெள்ளம் புகுந்துவிட்டது.

மத்திய பிரதேசத்திலிருந்து பம்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் வண்டி ஒன்று தடம் புரண்டதால், ரயில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் அகப்பட்ட 177 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. இவர்களை வெள்ளம் அடித்துச் சென்றிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## நாய்க் கொடி

சென்னை, செப். 6

தமிழ்நாடு அரசு தனிக் கொடி கோரியிருப்பதையொட்டி ராமநாதபுர மாவட்டத்தில் உள்ள ராஜபாளையத்தில் சிலர் 'நாய்க் கொடி' ஒன்றை ஏற்றியுள்ளனர். ராஜபாளையம் அதன் தனிவகை நாய்களுக்குப் புகழ் பெற்ற இடமாதலால் இவர்கள் தேசியக் கொடியில் மாநிலச்சின்னமான கோபுரத்தோடு ஒரு நாயின் உருவத்தையும் பொறித்துள்ளனர்.

மேற்படி இந்தநிகழ்ச்சியை சபையில் வெளியிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தேசியக் கொடியில் மாநிலத்தின் கோபுரச் சின்னத்துடன் ஒரு நாயின் உருவத்தையும் பொறித்துள்ளமை நாட்டிற்கும் மாநிலத்திற்கும் இழைக்கப்பட்ட அவமானமாகும் என்றும் இக்கொடியை ஏற்றியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

— —

## 3 கோடி ரூபா கடனுதவி

சென்னை, செப். 6

பர்மா அகதிகளுக்கு வீடுகள்கட்டிக்கொடுக்க 3 கோடி ரூபா அளிக்குமாறு மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டுள்ளது.

இத்தகவலை திரு. மதியழகன் சட்டசபையில் தெரிவித்தார்

இந்திய கலாசாரம் பற்றிய பி. பி. ஸி. நிகழ்ச்சி

# "எதைக் கண்டேனோ அதையேபடமாக்கினேன்"

## பிரஞ்சுக்காரர் கூற்று

லண்டன், செப். 6

இந்தியாபற்றி தாம் தயாரித்து வெளியிட்ட செய்திப் படம் இந்திய கலாசாரத்துக்கு முரணானது என்ற கருத்தை பிரஞ்சு பட இயக்குனர் திரு. லூயிஸ் மறுத்திருக்கிறார்.

இந்தப் படம் பிரிட்டனில் டெலிவிஷனில் காட்டப்பட்டது குறித்து இந்தியாவில் பலத்த சர்ச்சைகள் எழுந்தன. புதுடில்லியிலுள்ள பி. பி. ஸி. நிலையத்தையும் மூடவேண்டியேற்பட்டது.

பிரிட்டிஷ் ஒலிபரப்புக்கூட்டுஸ்தாபனத்தின் (பி. பி. ஸி.) 'லைன் அப்' எனும் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக திரு. மலி பாரிசிலிருந்து லண்டன் விரும்புவதாகவோ அர்த்தமல்ல.

பி. பி. ஸி. யினர் இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்டதைக் குறிப்பிட்டு இவ்வித கூச்சல் ஏற்பட்டதையிட்டு நான் மிகவும் வருந்துகிறேன். நான் விரும்பும் இடத்திற்குச் சென்று படம் பிடிக்க அரசு அனுமதித்தால்தான் இந்தியநாடு உண்மையான ஜனநாயகநாடாக முடியும் எனக் கூறினர்.

## தூரகிழக்கு நாடுகளில் முதலீடு: மணிலாவில் ஐ. நா. மகாநாடு

### இலங்கையும் பங்குபற்றுகிறது

லண்டன், செப். 6

ஐ நா. சபையின் கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனத்தினது மகாநாடு ஒன்று இம்மாத இறுதியில் பிலிப்பைன்ஸில் நடைபெறவிருக்கிறது. இலங்கை உட் ... றது. தூரகிழக்கில் முதலீடு செய்யும் சாத்தியங்கள் பற்றி இவர்கள் ஆராய்வார்கள். பிரிட்டிஷ் கைத்தொழில் சம்மேளனமும், பிரிட்டிஷ் தேசிய ஏற்றுமதி கவுன்சிலும் கூட்டாகச் சேர் ...

# வடக்கில் உ. கிழங்கு கிடைக்கவில்லை

— வடபகுதி சமாஜ செயலாளர்

# தெற்கில் விலைபோகாமல் கிடந்ததே

— உதவி அமைச்சர்

## விசாரணைக் குழுக் கூட்டத்தில் தகவல்

— நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த வருடம் வடபகுதியில் விதை உருளைக்கிழங்கிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் அதே சமயம், தென் இலங்கையில் விதை உருளைக்கிழங்கு மேலதிகமாக இருந்து தனிப்பட்ட வர்த்தகருக்கு மலிவாக விற்கப்பட்டதாகவும் நேற்று முன்தினம் யாழ். கச்சேரியில் நடந்த உருளைக்கிழங்கு பற்றிய விசாரணை குழு முன்னிலையில் தெரிவிக்கப் பட்டது.

வடபகுதி ஐக்கிய விளைபொருள் உற்பத்தியாளர் சமாஜ செயலாளர் திரு. ரி. கணேசன் சாட்சியமளிக்கையில் கடந்தவருடம் விதை உருளைக்கிழங்கிற்கு வடபகுதியில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் வெளிச் சந்தையில் அந்தர் 125 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அப்பொழுது விசாரணை குழுத்தலைவரான உதவி மந்திரி திரு. எச். எம். நவரத்ன தென்பகுதியில் விற்க முடியாமல் மேலதிகமாக இருந்த 38 தொன் விதை உருளைக்கிழங்கு அந்தர் 31 ரூபாவாக ஒரு வர்த்தகருக்குக் கொடுக்கப்பட்டதாகவும், அந்தவர்த்தகர், பத்திரிகையில் விளம்பரம் செய்து கூடியவிலைக்குவிற்றதாகவும் தெரிவித்தார்.

இவ்விஷயம் பெரும் ஆச்சரியமாக இருப்பதாக தெரிவித்த திரு கணேசன் விதை உருளைக்கிழங்கை வாங்க, சமாஜம் தயாராக இருப்பதாகவும் முற்பணம் கொடுக்கவும் தயாராக இருப்பதாவும் இதற்கான ஏற்பாட்டை செய்யும்படியும் விசாரணை குழுத் தலைவரை கேட்டுக் கொண்டார்.

சென்ற ஆண்டு புகையிலை உற்பத்தியில் மந்தம் ஏற்பட்டகாரணத்தினால் உருளைக்கிழங்கு உற்பத்தியில் பலர் அக்கறை காட்டினார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. கணேசன் மேலும் கூறியதாவது: மழை காரணமாக உருளைக்கிழங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டது உற்பத்தி முறையில் கட்டுப்பாடு வேண்டும் உற்பத்தி செய்வது கெட்டித்தனமல்ல அந்த உற்பத்தியை பணமாக்குவதுதான் கெட்டித்தனம். கடந்த ஆண்டு வவனியாவில் மேலதிகமாக இருந்த 60 அந்தர் விதை உருளைக்கிழங்கை கொண்டுவந்து கட்டுப்படுத்தி சங்கங்களுக்குக் கொடுத்தோம். வடபகுதியில் 125 ரூபாவிற்குக் கூட விதை உருளைக்கிழங்கு வாங்க விவசாயிகள் தயாராக இருந்தனர்.

உருளைக்கிழங்கு உற்பத்தியை நம்பி விவசாயிகள் வேறு ஏற்பாட்டைச்செய்யவில்லை. உருளைக்கிழங்கு பயிரிடுவதற்காகவே நிலத்தை தயார் செய்திருந்தனர். இதனால் 125 ரூபாவிற்குக்கூட விதை உருளைக்கிழங்கை வாங்கி நட்டிருக்கிறார்கள்.

விதை உருளைக் கிழங்கை சமாஜம் எடுத்து விநியோகிக்க தயாராக இருக்கிறது. இந்த விநியோகத்தால் அரசாங்கத்திற்கு கஷ்டம் இருக்காது.

விதை உருளைக்கிழங்குத் தட்டுப்பாடு அநேக காலமாக வடக்கில் இருந்துவருகிறது. வடக்கில் சுமார் 126 சங்கங்கள்வரை இருக்கிறது. இவற்றுள் 50 சங்கங்கள் வரை உருளைக் கிழங்குபயிர் செய்கிறது. ஒரு சில சங்கங்கள் பிழைவிடுவதால், அது எல்லாச் சங்கங்களையும் பாதிக்கிறது. பிழைவிடும் சங்கங்கள் மீது கண்காணிப்பு இருக்கவேண்டும், விதை உருளைக்கிழங்கை சங்கம் சரியான முறையில் நடப்பட்டிருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும். அப்படிச் செய்யாத சங்கங்களுக்கு தண்டனை விதிக்கவேண்டும் பிழைவிடும் சங்கங்களுக்கு அடுத்தவருடம் விதை உருளைக்கிழங்கு வழங்கக் கூடாது'

வெளிநாடுகளுக்கு இங்கிருந்து உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்வதாயிருந்தால் அவை நல்ல தரமானதாக இருக்கவேண்டும். உலகச் சந்தையில் நமது நாட்டு உருளைக்கிழங்கு நல்லபெயர் எடுக்க வேண்டுமானால் பக்குவமாக பயிரிட வேண்டும் ஆரம்பம் முதல் நன்கு கவனம் செலுத்தவேண்டும். அப்பொழுதுதான் நல்ல தரமான கிழங்குகளைப் பெற முடியும்.

......

## அண்ணா பிறந்த நாள் விழா

சென்னை, செப். 6

காலஞ்சென்ற முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் 62வது பிறந்த தினத்தை அவர் பிறந்த நாளான செப்டம்பர் 15ந் திகதியிலிருந்து செப்டம்பர் 30ந் திகதிவரை எல்லா மாவட்டங்களிலும் கொண்டாடத் திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்துள்ளது.

அண்ணாவின் பிறந்த தின விழாவைப் புதிய எழுச்சியுடன் எல்லா மாவட்டங்களிலும் கொண்டாடும்படி தி. மு. க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

— —

## அகில இந்திய சிவாஜி கணேசன் மன்றம்

சென்னை, செப். 6

அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிகர் மன்ற ஆரம்பவிழா தேனாம்பேட்டை காங்கிரஸ் மாளிகையில் தலைவர் திரு. சுக்கன் தலைமையில் நடைபெற்றது.

அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் மன்றத் தலைவர் சின்ன அண்ணாமலை நடிகர் திலகம் சிவாஜியின் ரசிகர்கள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் இருக்கின்றனர்.

இப்போது அகில இந்தியாவிலுமுள்ள லட்சோப லட்சம் ரசிகர்களை ஒன்று

போர்ஹான்ஸ்
புன்னகைப் புதிர்
போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெண்டியேற்பட்டது.

பிரிட்டிஷ் ஒலிபரப்புக்கூட்டுஸ்தாபனத்தின் (பி. பி. சி.) 'ஃலன் அப்' எனும் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக திரு. மலி பாரிசிலிருந்து லண்டன் வந்து சேர்ந்தார். திரு. மலியின் திரைப்படத் தொகுப்பை இந்திய அரசின் ஆட்சேபனையை ஏற்று நிறுத்த மறுத்ததன் காரணமாக இந்தியாவில் பி. பி. சி. யின் நடவடிக்கைகள் மூடப்பட்டன.

இங்கிலாந்தில் வாழுகின்ற எழுத்தாளர், வடிவமைப்பாளர், வர்த்தகர், திரைப்பட பெண் இயக்குனர் ஆகியோரில் 'மூவர்' திரு. மலி இந்தியாவைப்பற்றி தவறாகத் திரித்துக் காட்டியுள்ளார் எனத் தெரிவித்தனர் எவ்வித ஆதரிப்புமின்றி பிரான்சில் இக்காட்சி காண்பிக்கப்பட்டதாக இந்நிகழ்ச்சி தொடங்கியபொழுது அறிவிப்பாளர் தெரிவித்தார்.

இவ்வித கண்டனத்திற்கு அவர் பதிலளிக்கையில் நான் இந்தியாவில் எதைக் கண்டேனே, அங்கிருந்து எவ்வித உணர்வைப் பெற்றேனே அதையே இப்படம் மூலம் அளித்துள்ளேன். அங்கு செல்லும்பொழுது எவ்வித எழுத்துப்பிரதியோ அல்லது எவ்வித எண்ணத்தை மனத்திற்கொண்டோ செல்லவில்லை எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், 'இதுதான் இந்தியா எனக் காட்ட முயன்றேன். இது எனது இந்திய நாடு. நான் பார்த்தது போன்றதே இவ்விந்தியா. இந்தியாவைத் தெரிந்து கொள்வது வெளிநாட்டவருக்குச் சுலபமானதல்ல.' என்ருர்.

இந்திய வாழ்க்கை முறையை மிகவும் மென்மையாகக்காட்டியதாக சில நண்பர்கள் கருதினர். எனது ஐந்து மாதப் படப்பிடிப்பில் பிச்சையெடுப்போர் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது

இந்தியாவில் புரட்சி ஏற்படுமென எதிர்பார்க்கின்றேன். இது எனது விருப்பமோ அல்லது புரட்சிகரமான இந்தியாவைக் காண

## சோவியத்தில் ஆசிய-ஆபிரிக்க இலக்கியம்

மாஸ்கோ, செப். 6

பாகிஸ்தான் கவிஞர்கள் உட்பட ஆசிய - ஆபிரிக்க கவிஞர்களின் கவிதைத் தொகுப்பொன்று அண்மையில் சோவியத் மத்திய ஆசியக் குடியரசில் வெளியிடப்பட்டது.

லண்டன், செப். 6

ஐ. நா. சபையின் கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனத்தினது மகாநாடு ஒன்று இம்மாத இறுதியில் பிலிப்பைன்ஸில் நடைபெறவிருக்கிறது. இலங்கை உட்பட ஆசியாவிலிருந்தும் தூரகிழக்கிலிருந்தும் பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இம் மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளன இம் மகாநாடு மணிலா நகரில் இம்மாதம் 23ந் திகதியிலிருந்து 30ந் திகதி வரை நடைபெறும்

ஆசியா, தூரகிழக்கு பிராந்தியத்திற்கான பொருளாதார கமிஷனின் ஆதரவின் கீழ் இம்மகாநாடு நடைபெறுகிறது. ஆசிய கைத்தொழில் திட்டங்களை விருத்தி செய்வது சம்பந்தமாக இம் மகாநாட்டின்போது ஆராயப்படும்.

14பிரபல பிரிட்டிஷ் வர்த்தக அதிபர்களைக்கொண்ட தாதுகோஷ்டி ஒன்றும் இம் மகாநாட்டில் பங்குபற்றுகிறது. தூரகிழக்கில் முதலீடு செய்யும் சாத்தியங்கள் பற்றி இவர்கள் ஆராய்வார்கள். பிரிட்டிஷ் கைத்தொழில் சம்மேளனமும், பிரிட்டிஷ் தேசிய ஏற்றுமதி கவுன்சிலும் கூட்டாகச் சேர்ந்த இந்த பிரிட்டிஷ் வர்த்தகர் கோஷ்டியை அனுப்புகின்றன.

இம் மகாநாட்டின்போது முதலீடு செய்ய விரும்பும் முன்னேறிய நாட்டு வர்த்தக பிரதிநிதிகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை தனித்தனியே சந்தித்து பேச்சுக்களை நடத்துவார்கள். இலங்கை உட்பட ஆப்கானிஸ்தான், பர்மா, பிஜிதீவு, ஹொங்கொங், இந்தியா, இந்தோனேஷியா, தென்கொறியா, மலாசியா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென்வியட்னும் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

# படகு கவிழ்ந்தது: 90 மாணவர் பலி

மைசூர், செப். 6

கிருஷ்ணநதியின் படகு ஒன்று கவிழ்ந்ததால் அதில் பிரயாணஞ்செய்த 90 பள்ளிக்கூட மாணவர்கள் நீரில் மூழ்கி மாண்டனர்.

ஒரு திருவிழாவைப்பார்ப்பதற்காக பள்ளிக்கூடமாணவர்கள் கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள அத்தீவுக்குப்படகில் அழைத்துச் செல்லப்பட்டபோது நதியின் மத்தியில் படகு கவிழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது ஆசிரியர்களும் இதில் பிரயாணஞ்செய்தனர்.

இதுவரை 25 சடலங்கள் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டன.

## திருடிக்கொண்டு ஓடினுராம்

சுழிபுரம், ஞாயிறு

பொன்னுலைக் கோவிலில் கடலை வியாபாரம் செய்து ரூபா 300-க்கு மேல் ரொக்கமாக வைத்திருந்த தொல்புரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் பணப்பெட்டியை பட்டப்பகலில் இனம் தெரியாத வாலிபர் ஒருவர் திருடிக்கொண்டு ஓடினுராம் வாலிபனைப் பலர் பின் தொடர்ந்துதுரத்திச்சென்றபோதிலும் அவரைப் பிடிக்க முடியாது போய்விட்டதாம்.

## சிரமதானம்

நெல்லியடி, ஞாயிறு

"சிரமதானம் மூலம் நாம் எமது திருத்தவேலைகளைச் செய்யவேண்டும். இதற்கு இளைஞர்களின் உதவி மிக முக்கியம்" என்று கட்டைவேலிக் கிராமசபையின் 3ம் வட்டார உறுப்பினர் திரு. பொன். சிவபாக்கியம் அப்பகுதி மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கூறினுர்.

## விடுதலை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற பருத்தித்துறை நகரசபை தேர்தலில் 5-ம் வட்டாரத்திற்கு போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு. பிரான்சிஸ் வின்சென்டிபோல் என்பவர் அனுராதபுரம் பிரதான வீதியைச் சேர்ந்த கே. முருகேசபிள்ளை என்பவருக்கு ரூபா 10 மணியோடர் அனுப்பி தனக்கு வாக்களிக்கும்படி கேட்டதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசாவினுல் விசாரிக்கப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரியைச் சுற்வாளியாகக் கண்டு விடுதலை செய்தார்.

......


யாழ்ப்பாணம், திங்கள்

உருத்திரபுரம் சிவாலயத்தில் கடந்த வியாழனன்று கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மணவாளக்கோல அபிஷேகங்கள் நடைபெற்றன.


# போட்டி.

## ரூபா 17,650-00

பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



| | |
|---|---|
| முதலாவது பரிசு | ரூபா 5000-00 |
| இரண்டாவது பரிசு | ரூபா 3000-00 |
| மூன்ருவது பரிசு | ரூபா 2000-00 |

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் – ரூபா 5000-00
ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் – ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிருர்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவருதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, மெ/பா. ஷெனித் அட்வெடைசிங், த. பெ. இல. 1479, கொழும்பு என்ற விலாசத்திற்கு" அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், ஷெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதையிட்டு எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................
வியாபாரியின்
பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................




ZENITH


மட்டுமன்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் இருக்கின்றனர்.

இப்போது அகில இந்தியாவிலுமுள்ள லட்சோபலட்சம் ரசிகர்களை ஒன்று திரட்டி ஓரணியில் அமைத்து தேசியப் பாதையில் அவர்களைச் செவ்வனே நடத்திச் செல்லவே இந்த அகில இந்திய மன்றத்தை அமைத்திருக்கிருேம் என்று குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்து மன்றத்தைத் துவக்கி வைத்த திரு. கக்கன், நடிகர் திலகம் தேசிய குடும்பத்தில் பிறந்தவர். தேசியப் பாரம்பரியததில் வசித்தவர் அதனுல் அவர் இன்று காங்கிரஸ் மகாசபையில் தலைவர் காமராஜ் காட்டும் வழியில் சென்று கொண்டிருப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியது அல்ல தமிழகமெங்கணும் உள்ள அவரது அன்பு ரசிகர்கள் தேசியப் பணியில் தீவிரமாகவும் ஆர்வத்துடனும் ஈடுபட்டு சிறப்பாக காரியமாற்றி வருகிருர்கள். அவரது ரசிகர்கள் இந்தியா முழுவதும் இருப்பதால் அவர்களுக்காக அகில இந்திய மன்றம் அமைப்பது சாலப் பொருத்தமுடையது. மன்றத்தை துவக்கிவைப்பதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன் என்று கூறினுர்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் குத்துவிளக்கை ஏற்றிவைத்துப் பேசுகையில், தலைவர் காமராஜ் காட்டும் வழியில், இன்னும் தீவிரமாகவும் கட்டுப்பாட்டுடனும், பொறுப்புடனும், மக்கள் பார்த்து மேலும் மெச்சக் கூடிய வகையிலும் பாடுபடுவதற்காக இந்த மன்றம் செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## கிளைக்கு அறிவிப்பு

ஆனையிறவு, ஞாயிறு

ஆட்சிமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கொறடாவுமம் அநுராதபுரம் எம். பி.யுமான திரு. கே. பி. ரத்னுயக்கா. இம்மாதம் 30ந் தேதி கிளிநொச்சித் தொகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயஞ்செய்வதாக. கிளிநொச்சித் தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைச் செயலாளர் திரு. எம். எஸ். கே. இலட்சுமணனுக்கு அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையை இரண்டு வருடங்களுக்கு முன்னர் திரு. ரத்நாயக்காவே திறந்துவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தரித்திரனாய் இருக்கும்போது திருப்தி அடையாதவன் செல்வனாக மாறியபோதும் திருப்தி அடையமாட்டான். திருப்தி அடையாமை மனக்குற்றமே அன்றி பொருட் குற்றம் அன்று.

—ஆறுமுகநாவலர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 22-ந் திகதி (7-9-70)


## தேசியக் கடமை

இரண்டாவது கொத்து அரிசியை எழுபத்தைந்து சதம் கொடுத்து வாங்கினால் தான் முதல் கொத்து அரிசி இலவசமாகக் கிடைக்கும் என்பது சரியல்லவென்றும் முதல் கொத்து அரிசியை இலவசமாகவாங்கிக்கொண்டு இரண்டாவது கொத்து அரிசியை வாங்காமல் விடலாமென்றும் உள்நாட்டு வெளிநாட்டு பதில் வர்த்தக அமைச்சர் திரு. பி. ஆர். இரத்நாயக்கா தெளிவு படுத்தியிருக்கிறார். இது பலருக்கும் ஆறுதலளிப்பதாகும்.

இரண்டு கொத்து அரிசி வழங்குவதற்காக நவசீனு, பர்மா முதலிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கான ஏற்பாட்டைச் செய்திருப்பது பெரிய காரியம். இங்கு பட்டினிச் சாவுகள் இருக்கத் தேவையில்லாதபடி செய்ய முன்வந்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும்.

இரண்டு கொத்து பங்கீட்டு அரிசி கிடைக்குமென்ற செய்தி வெளியானதுமே இங்கு மார்க்கெட்டில் அரிசி விலை குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக ஒருவருக்கு வாரத்தில் இரண்டு கொத்து அரிசி அநேகமாகப் போதும். அதிகப்படி வேண்டியவர்கள் அரசாங்கத்திடமே (அதிக விலை கொடுத்து) பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிகிறது. தனிப்பட்டவர்கள் இனி அரிசி வியாபாரத்தில் ஈடுபட முடியாதாம். பங்கீட்டரிசியின் அளவை இரட்டிப்பாக்கியுள்ளதால், அரசாங்கம் கூடுமானவரை உள்நாட்டு அரிசியைத் தானே ஏகபோகமாக வாங்கவேண்டிய அவசியம் அதிகரித்திருக்கிறது. இனி நாட்டரிசியும் பங்கீட்டில் அதிகம் கிடைக்கக் கூடும். நாட்டரிசி என்றால் அதில் கல்லும் மண்ணும் அதிகம் கலந்திருப்பது சக...

...அரிசியை, வட்டியில்லாக் கடனாகப் பெறுவதற்கு இங்கிருந்து வர்த்தக அமைச்சர் இலங்கரத்ன பீகிங்குக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இச்சமயத்தில் இந்த உதவியைச் செய்யும் புதுசீனத்துக்கு நமது நன்றி உரித்தாகும். இவ்விதமாகப் பிறரிடம் நாம் உதவிகளைப் பெறுவது நமது நாட்டின் மதிப்பை உயர்த்துவதற்கில்லை. அத்துடன் நாமும் உதவியளிக்கும் நாடுகளுக்குக் கடமைப்பட்டவர்களாகின்றோம். உணவு முதலிய அத்தியாவசியப் பொருட்களில் பிறரை நாம் நம்பியிருப்பது பத்திரமுமல்ல. கூடுமான வரை இங்கு நெல் உற்பத்தியைப் பெருக்கி, தன்னிறைவு பெற எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டிய அவசியம் அதிகரித்திருக்கிறது. நீர்வளம், நிலவளம் மட்டுமன்றி உழைக்கும் கைகளும் இங்கு அதிகமுண்டு. வேற்றுமைக் கண்ணுடன் பாராமல், இந்த வாய்ப்புகளையெல்லாம் பூரணமாக நாம் பயன்படுத்துவதாயின், அரிசி உற்பத்தியைப் பெருக்கி, பிறரிடம் கையேந்த வேண்டிய அவசியமில்லாமல் செய்துகொள்ளலாம். இதனால் நமக்குச் செலாவணி மிச்சமாவதுடன், இங்குள்ள வேலையில்லாப் பிரச்னையையும் ஓரளவு தீர்த்துக்கொள்ள முடியும். படித்த வாலிபர்களும் இவ்வித வேலைகளில் ஈடுபட தியாக உணர்ச்சியுடன் முன்வர வேண்டும்.

பொதுமக்களும் அரிசிக்குப்பதில் வேறுமாற்று உணவைப் பழகிக்கொள்வது, பலவிதங்களிலும் நல்லது. இதனால் அரிசிக்கான கிராக்கி குறைவதுடன், தேக சுகாதாரமும் மேம்படலாம். பங்கீட்டு அரிசியை கட்டா...

# கொழும்பில் மோரும் இளநீரும் யாழ்ப்பாணத்தில் சாராயம்!

''நீங்கள் கொடுத்த புடவையையும் என்னுடன் எடுத்துச் செல்லுகிறேன்'' என்று பிரதமர் ஸ்ரீமா, கட்டுநாயகாவிலே லூஸாகாவுக்குச் செல்ல விமானத்தில் ஏறுகையில் ஒரு பெண் மணியைப் பார்த்துக் கூறியதும், அப்பெண்மணியும் நன்றியுடன் சிரித்தாராம்.

பிரதமர் எடுத்துச் செல்லும் அந்தப் புடவை எதுவோ? எப்படியும் அது இலங்கைச்சேலையாகத்தான் இருக்கும். லூஸாகாவிலோ அல்லது வேறு நாடுகளிலோ ஸ்ரீமா அதைக் கட்டிக் கொண்டு செல்லும்போது, நமது இலங்கைச் 'சாரி' களுக்கு அது ஒரு விளம்பரமாக இருக்கும், வெளிநாடுகளிலிருந்து இனி அவ்வித இலங்கைப் புடவைகளுக்கு 'ஓடர்' கள் கிடைக்குமா? என்பது இனித்தான் தெரியவேண்டும். அது எப்படியாயினும் பிரதமரின் மனதைக் கவர்ந்த அந்தக் குறிப்பிட்ட புடவை என்ன ரகமானது, யார் தயாரித்தது என்ற விவரங்கள் இங்கு வெளியாகுமாயின், இலங்கையிலே அது ''லூஸாகா'' புடவை என்று பெயர் பெற்று புது 'பாஷ'னாகவும் வரக்கூடும்.

0 0 0

கொழும்பிலே பால்சாலைகளில் இப்போது நல்லமோர் விற்கிறார்கள். ருசியாக உள்ளது. விலைதான் சற்றே கூடிவிட்டது, அரைபயின்ட் 20 சதம். விலையை 15 சதமாகக் குறைக்கலாம். மோரில் தண்ணீரும் சற்று குறைவாக இருக்கலாம்

வெய்யில் வேளையிலேஇது தாகசாந்தியாக மட்டுமல்லாமல் உணவாகவுமிருக்கிறது. இதேமாதிரி யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலும் விற்பதாயின், நல்ல இலாபம் கிடைப்பதுடன், மக்களும் இதை விரும்பிச் சாப்பிடுவர்.

இலங்கையிலே கிராமங்கள் உட்பட எங்கு சென்றாலும் சரி. தாகத்துக்கு சோடாவும், பார்லியும் தான். விலையும் அதிகம். இதைக் குடிப்பதால் தாக...

### ஐயாறன் எழுதுவது

...மும் அடங்குவதில்லை. தென்னந்தோட்டங்களுக்கு இடையிலுள்ள கடைகளிலும் கூட சோடாவும் பார்லியும்தான் கிராமாந்திரங்களிலும் 'பார்லி' உடைத்துக் கொடுப்பதுதான் 'பாஷன்' ஆகியுள்ளது. மோர், இளநீர் முதலிய இயற்கையான பானங்கள் கொடுப்பதை அநேகமாக மறந்துவிட்டோம்.

பால் சபையார், மோரை தலைநகரங்களிலும் விற்பதாலும், கால்சட்டை போட்டவர்களும், அதை வாங்கிக் குடிப்பதாலும், இனி மோருக்குப் புதுமதிப்பு ஏற்பட்டு மீண்டும் விருந்தினருக்கு அதை நம் வீடுகளில் அளிக்கக்கூடிய வழக்கம் ஏற்படுமா?

பால், மோர் இவற்றைப் போல, நல்ல இளநீரையும் பாட்டில்களில் அடைத்து, ஆங்காங்கே ஏன் விற்பனை செய்யப்படாது? இப்படிச் செய்து, அதன் நன்மையை உணர்ந்தால், மதுபானங்கள் அருந்துபவர்களும், அதை விட்டுவிட்டு மோர், இளநீர் இவற்றை அருந்தக்கூடும் என்கிறார் நண்பரொருவர்.

0 0 0

ஆனால் யாழ்ப்பாணத்திலே இம்முறை சாராயக் தவறணை ஏலக் குத்தகை இதுவரை என்றுமிலாதபடி அதிகமாகியுள்ளதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். அந்த மாவட்டத்திலுள்ள 5 சாராயத்தவறணைகள் அடுத்த ஆண்டுக்கு 10 லட்சத்து 84 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் போயிற்றாம். அதாவது நடப்புவருடத்தைவிட இது ஒருலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் அதிகமாகும். இதற்குமேல் குத்தகைக்காரர் லாபம் வைத்து விற்பர். இந்தப்பணமெலாம் பெரிதும் ஏழைக்குடும்பங்ள் செலுத்தும். மதுபானம் குறைவதை விட, யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பது கவலைப் படத்தக்கதாகும். இதனால் எவ்வளவு குடும்பங்கள் தவிக்கப்போகின்றனவோ!

வடக்கே கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் கணக்கில்லை. அவர்கள் ஒருவராவது மது அரக்கனிடமிருந்து மக்களைக் காக்க ஏன் வாய்திறந்து ஒருவார்த்தையும் கூற மறுக்கிறார்கள்? மகாத்மாகாந்தி யாழ்ப்பாணம் வந்திருக்கையில், மதுபானத்தால் ஏற்படும் கேடுகளை பல கூட்டங்களிலும் கூறி அதை ஒழிக்க வேண்டுமென்றார் இப்போது மது பானம் குறைவதற்குப்பதில் கூடிக்கொண்டே போகிறது. இதைக் கண்டால் அவர் என்ன சொல்லுவார்?

0 0 0

போற்றேனெனினும் பொறுத்திடல் வேண்டும் புவிநடையாம் சேற்றே வீழ்ந்து தயங்குகின்றேன் இனிச் சிறிதும் ஆற்றேன் எனது அரசே அமுதமே என் அருட்செல்வமே வேற்றேன் பெருகு பொழில் தணிகைக் குருபரனே ஆற்றேன் வந்தடைந்தேன் என்னை ஆட்கொண்டருளே.

## நிழல் நாடகவிழா
## 'பாவிகள்'

—கே. கே. வி.

நிழல் நாடக மன்றத்தினரின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப் பட்டது 'பாவிகள்' என்ற சமூக நாடகம்.

குடிவெறியால் சீரழிந்த நிலையில் மனைவியையும் இழந்த நல்லசிவம் வாழ்க்கையைச் சீராக நடத்தவும் இயலாது தன்னுடைய பிள்ளைகளில் ஆண் குழந்தையாகிய மகேஷ்வரை பிள்ளையில்லாத ஒருவருக்குக் கொடுத்து விட்டுத் தன் பெண்குழந்தை சாந்தியைத் தான் வளர்த்து வரும் பொழுது கண்க...

...டில் வந்து தங்கியிருக்கிறார். ஷீலாவின் தகப்பனரால் டாக்டருக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு விருந்துபசாரத்துக்கு சாந்தியும் அழைக்கப்பட்டு ஷீலாவின் மூலம் டாக்டருக்கு அறிமுகமாகிறார். நல்லசிவத்தின் கண்பார்வையைக் குணப்படுத்துவதற்காக டாக்டரை நல்லசிவத்தின் வீட்டுக்குக் கூட்டிவருகிறார் ஷீலா. டாக்டருக்கு சாந்திமேல் காதல் ஏற்படுகிறது. சாந்தி முதலில் மறுத்தாலும் ஷீலாவின புத்திமதியால் சம்மதிக்கிறார். நல்லசிவத்திற்கும் விஷயத்தை விளக்கிய ஷீலா கலியாணத்திற்கு ஏற்பாடுகளைச்...

## ''பாறைகளை வெட்டியபின் கிழங்குகளை பயிரிடலாம்''

யாழ்ப்பாணம், திங்கள்

சுமார் 12,000 ஏக்கர் பாறைகள் கொண்ட காணிகள் வடமாகாணத்தில் இருக்கின்றன என்று நேற்று யாழ். அரசாங்க செயலகத்தில் நடந்தஉருளைக்கிழங்கு கமிஷன் விசாரணையின் போது யாழ். அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் சாட்சியம் அளித்த போது தெரிவித்தார்.

இந்தப்பாறைகளை வெடி வைத்து எடுத்துக் கா[illegible]களை பதம் செய்தால் [illegible]திய உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யமுடியும் என்றும் [illegible]றினர். இந்தக்காணி[illegible]ம் நல்ல வளமான பூமியாகும் என்றும் அதை...

...உள்ள கூட்டுறவுச்சங்கத்தில் 40 பேர்மட்டுமே உருளைக்கிழங்கு உற்பத்தி செய்கின்றன. மற்றவர்களையும் ஊக்கம் செய்து விதைகிழங்கு வழங்க ஆவன செய்துதர வேண்டும் வசதியானவர்களுக்கே விதை உருளைக்கிழங்கு வழங்கப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மேலும் உருளைக்கிழங்கு அறுவடைகாலம் சந்தை விலை குறைந்து விடுவதாகவும் அனேகம் தோட்டக்காரர்கள் பிஞ்சுக்கிழங்கையே வியாபாரிகளிடம் விற்க வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

தேசிய விவசாயிகள் முன்னணி சா[illegible]பில் தி.விஜயானந்...

## கடமை செய்யவிடாது தடுத்துத் தாக்கினராம்
### இரு பொலிஸார் வழக்குத்தாக்கல்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமை செய்யவிடாது தடுத்ததாகவும் தாக்கியதாகவும் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீதும் வேறொருவர் மீதும் வழக்குத் தாக்கலாகியுள்ளது.

முல்லைத்தீவுப் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குமாரசாமி அரசரத்தினம் என்னும் மாஜி பொலிஸ் உத்தியோகத்தரும், அதே ஊரைச் சேர்ந்த சிதம்பரம் என்பவரும் சேர்ந்து முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்புக்குக் கடமை செய்யச் சென்ற விமலசிறி, ரணசிங்கா ஆகிய இரு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கடமை செய்யவிடாது தடுத்ததாகவும், அவர்களைத் தாக்கியதாகவும் முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட இவ்வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு எம். பி. ஜி. திசநாயகா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப் பட்டது. நீதிபதி எதிரிகளை தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 16-ம் திகதிவரை விசாரணையை ஒத்திவைத்தார்

## ஆசியை பெற்றார்

கொழும்பு, ஞாயிறு

பதில் பிரதமரான திரு, மைத்திரிபாலசேனநாயக்கா இன்று காலை கண்டிக்குச் சென்று அஸ்கிரியமல்வத்தை பீடத்தைச் சேர்ந்த மகா நாயக்கதேரோவின் ஆசியை பெற்றுக்கொண்டார். அங்கிருந்து அவர் அனுராதபுரத்திற்குச் சென்றார்.

## புங்குடுதீவு செய்திகள்

**நிர்வாகிகள்**

ஊரதீவு, ஞாயிறு

புங்குடுதீவு குறிகட்டுவான் நடுவுத்துருத்தி கிராம முன்னேற்றச்சங்க புதிய நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சு. திருநாவுக்கரசு, உபதலைவர்: க சின்னத்துரை, செயலாளர்; க. சண்முகலிங்கம், உபசெயலாளர்: மு தங்கவேல், பொருளாளர்: த. குமரன் உபபொருளாளர்: மு. சிவதாசபிள்ளை ஐந்துபேர்கொண்ட நிர்வாக சபையும்தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

புங்குடுதீவு மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் வருமாறு: தலைவர்: நா. சோமசுந்தரம், உபதலைவர்: க. ஏரம்பு, செயலாளர்: க. முத்துத்தம்பி, நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

**படக்காட்சி**

குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கும்படக் காட்சி ஒன்றை சுகாதாரப் பகுதியினர் ஊரதீவு இளந் தமிழர் மன்ற நூலக முன்றலில் காட்டினர் ஏராளமான பொதுமக்கள்பார்வையிட்டனர்.

**இடமாற்றங்கள்**

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு புங்குடுதீவு அமெரிக்கன்மிஷன் வித்தியாசாலை ஆசிரியர் திரு சு யோ பூராசா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புங்குடுதீவு றோமன் கத்தோ...


# ஈழநாடு
## வாரமலர்
## 8-9-70

சிறுகதை
பிறந்தமண்
('பன்னீரன்' எழுதியது)
★
அழகும் ஆரோக்கியமும் சுலபமாகப் பெறவழி
★
நடக்கின்றார் முத்தையா
-கவிதை
★
திகிதிக்கும்...


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஐம் கூடுமானவரை உள்நாட்டு அரிசியைத் தானே ஏகபோகமாக வாங்கவேண்டிய அவசியம் அதிகரித்திருக்கிறது. இனி நாட்டரிசியும் பங்கீட்டில் அதிகம் கிடைக்கக் கூடும். நாட்டரிசி என்றால் அதில் கல்லும் மண்ணும் அதிகம் கலந்திருப்பது சகஜம். மனிதர்தான் கலப்படம் செய்கிறார்களேயன்றி இயற்கை அன்னை யல்ல. உண்ணும் உணவிலே கல்லும் மண்ணும் கலப்பது பெரிய பாவம். அரிசி மில்களையும் அரசாங்கமே எடுத்து நடத்துமென்று அறிவிக்கப்படுகிறது அப்படிச் செய்தால் கலப்படம் இல்லாமல் தடுக்க அதிக வாய்ப்புண்டு.

புதுசீனத்திடமிருந்து இதற்காக ஒரு லட்சம் டன்

பொது மக்களும் அரிசிக்குப்பதில் வேறுமாற்று உணவைப் பழகிக்கொள்வது, பலவிதங்களிலும் நல்லது. இதனால் அரிசிக்கான கிராக்கி குறைவதுடன், தேக சுகாதாரமும் மேம்படலாம். பங்கீட்டு அரிசியை தட்டாமல் கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சாருமென்று கருதாமல், இது நமது தேசியப் பிரச்னைகளில் முக்கியமானதென்று உணர்ந்து, இதைத் தீர்ப்பதில் கூடுமான உதவிசெய்து ஒத்துழைக்க முற்படுவது நாட்டில் நம் ஒவ்வொருவரது தேசீயக் கடமையுமாகும்.

இயலாது தன்னுடைய பிள்ளைகளில் ஆண் குழந்தையாகிய மகேஷ்வரை பிள்ளையில்லாத ஒருவருக்குக் கொடுத்து விட்டுத் தன் பெண்குழந்தை சாந்தியைத் தான் வளர்த்து வரும் பொழுது கண்களில் நெருப்புப்பொறி பறந்ததினால் கண்பார்வையையும் இழந்து விடுகிறார். சிறு குழந்தையாயிருந்த மகேஷ்வர் பிறநாட்டிலிருந்து வளர்த்து, படித்து, டாக்டர் பட்டம் பெற்று விவாகப்பேச்சினால் ஏட்பட்ட கருத்து வேற்றுமையால் தன் வீட்டாரை வெறுத்து வெளியேறி நல்லசிவத்தின் மகளான சாந்தியின் சிநேகிதி ஷீலா என்ற ஒருவரின் வீட்

[illegible] வருகிறார் ஷீலா. டாக்டருக்கு சாந்திமேல் காதல் ஏற்படுகிறது. சாந்தி முதலில் மறுத்தாலும் ஷீலாவின புத்திமதியால் சம்மதிக்கிறார். நல்லசிவத்திற்கும் விஷயத்தை விளக்கிய ஷீலா கலியாணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி தூண்டுகிறார் கலியாண ஏற்பாடுகளைக் கவனிக்க குருடான நல்லசிவம் தன் உற்ற நன்பராகிய ராஜகோபாலை வெளியூரிலிருந்து அழைக்கிறார். கலியாணத்தை நடத்தி வைக்க வந்த ராஜகோபால் மாப்பிள்ளையாகிய டாக்டர் மகேஷ்வரைக் கண்டதும் கலியாணம் நடக்கக் கூடாதென்று தடுத்து விடுகிறார். நல்லசிவத்திற்கும் ராஜகோபாலுக்கும் வாக்குவாதம் நடைபெற்றபின்பு கலியாணத்தைத் தடுத்ததன் காரணம் மாப்பிள்ளை, நல்லசிவத்தின் மகன் என்பதை விளக்கி இந்தக் கல்யாணம் நடந்திருந்தால் எல்லோரும் பாவிகள் என்பதை விளக்குகிறார் ராஜகோபால். இது தான் கதை.

உணர்ச்சியூட்டக் கூடிய வகையில் நன்றாகப் பின்னப்பட்டுவிறுவிறுப்பாகக் கதையை அமைத்திருக்கிறார். திரு எஸ் ஏ அழகேசன் ஒரே அரங்கில் நடிக்கக் கூடியதாக அமைத்தது அவர் திறமையை நன்கு காட்டுகிறது.

நடிக நடிகையர் திறம்பட நடித்து நாடகத்திற்கு மெருகூட்டினர். நல்லசிவமாக நடித்த திரு ஏ. பிரான்சிஸ் பிரமாதமாக நடித்தார். பாத்திரத்திற்கு ஏற்ற தோற்றம். அதற்குப் பொருத்தமான நடிப்பு. உணர்ச்சிமிக்க வசனப் பேச்சு. திறமையான நடிகர் என்று காட்டிவிட்டார்.

நண்பர் ராஜகோபாலாக நடித்த கே ஏ ஜவாஹர் ஏற்ற பாத்திரத்துடன் ஒன்றி ஊறி வெகு திறமையாக நடித்து உணர்ச்சிகளை அள்ளிக் கொட்டித்தான் முதல் நாள்விட்ட சிறு குறைகளை நிவர்த்தி செய்து கொண்டார். முதல் நாள் ஏற்ற இன்ஸ்பெக்டர் பாத்திரத்தைவிட இது மிகவும் பொருத்தமானதாக அமைந்தது. செல்வி சித்திராதேவியும் செல்வி ஜெயந்தியும் முறையே சாந்தி, ஷீல பாத்திரங்களை ஏற்றுத்திறம்பட நடித்தார்கள்.

டாக்டர் மகேஷ்வராக நடித்த திரு. ஏ. ரகுநாதன் முதல் நாள் நாடகத்தை விடச் சோடைபோய்விட்டார். பிரான்சிஸ், சித்திராதேவி, ஜெயந்தி ஆகியோரின் நடிப்பிற்கிடையே திரு ரகுநாதன் தாக்குப்பிடிக்க முடியாமற் தத்தளித்தது நன்கு புலப்பட்டது. அவர் நடிப்பு எடுபடவில்லை.

வைத்து எடுத்துக் கா[illegible] பதம் செய்தால் [illegible]திய உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யமுடியும் என்றும் அவர் கூறினார். இந்தக்காணி மிகவும் நல்ல வளமான பூமியாகும் என்றும் [illegible]வதை வரம்பு கட்டி பா[illegible]க்கிப் பயன்படுத்த உதவவேண்டும் என அவர் கருத்துத் தெரிவித்தார்.

நியமன எம்பி திரு எம் சி சுப்பிரமணியம் சிறுபான்மை மக்களுக்கு உருளைக்கிழங்கு செய்யக்காணி வழங்கும்படியும் சாட்சியமளித்தபோது கேட்டுக்கொண்டார்.

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளன சார்பிலும், புத்தூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் எஸ். ஆறுமுகம் விசாரணை சபையிடம் சாட்சியம் அளித்தபோது கூறியதாவது; 1300 பேர் உறுப்பினர்

## வரியிறுப்பாளர் எதிர்ப்புக் கூட்டம்

மானிப்பாய், திங்கள்

மானிப்பாய்க் கிராமச் சங்க எல்லைக்குள் வசிக்கும் மக்களின் சோலைவரி அதிகரிப்பை எதிர்த்து இன்று சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் எதிர்ப்புக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

டாக்டர் பொன். அம்பலவாணர் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

திரு ஜவாஹர் இறுதிக் காட்சியில் தோன்றியதும் எல்லோரினதும் உணர்ச்சிமிக்க நடிப்பும் சேர்ந்து திரு ரகுநாதனை அதளபாதாளத்தில் தள்ளிவிட்டது. திரு ரகுநாதன் தயாரிப்பில் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களினால் நடிப்பைக் கவனிக்க முடியவில்லைப்போலும். அவர் நடிப்பை விட்டு ஒரு தயாரிப்பாளராக மட்டும் இருந்து விட்டால் நல்லது.

இந்நாடகத்தை நெறிப்படுத்தியதன் மூலம் திரு சுஹேர் ஹமீட்டும் நல்ல பெயரைத் தட்டிக் கொண்டார் நல்ல சிவத்திற்கு வசனங்களை ஞாபகப்படுத்திக் கொடுத்த 'புறக்டர்' உரக்கக் 'கத்தி'க் கொண்டிருந்ததைக் கேட்ட பார்வையாளர் பலர் ஒருவர் முகத்தை ஒருவர்பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். நல்லசிவத்திற்குக் கண்பார்வை தான் சரியாயில்லை. காதுமாகேட்காது? என்றும் பேசிக் கொண்டார்கள்.

ஒளியமைப்பு முதல்நாள் நாடகத்தைவிட நன்றாக அமைந்திருந்தது. அரங்க அமைப்பு, ஒப்பனை யாவும் நன்று. பொதுவாக ஒரு நல்ல நாடகம் நல்ல தயாரிப்பு.

வும் அனேகம் தோட்டக்காரர்கள் பிஞ்சுக்கிழங்கையே வியாபாரிகளிடம் விற்க வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

தேசிய விவசாயிகள் முன்னணி சார்பில் தி. விஜயானந்தன் தலைமையிலான குழுவும் மகஜரைச் சமர்ப்பித்துப் பேட்டியளித்தது. (கு வி ம)

......

பொலநறுவை மகாநாட்டில்

## பிரேரணை மறுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

பொலநறுவையில் கடந்த மாதம் இறுதியில் நடைபெற்ற அகில இலங்கைப் பட்டினசபைகள் சமாஜத்தின் 5-வது வருடாந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபையில் தமிழருக்கும் இடமளிக்கக் கோரும் தீர்மானம் சம்பந்தமாக மகாநாட்டில் கலந்து கொண்ட பண்டத்தரிப்புப் பட்டினசபைத் தலைவர் திரு.ஜே. சூசைப்பிள்ளை எழுதுவதாவது.

பொலநறுவையில் நடைபெற்ற அகில இலங்கை பட்டினசபைகள் சமாசத்தின் 5-வது வருடாந்த மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சி கடந்த 29-ம் திகதி ஆரம்பமானபோது காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. ஜெயபாலசிங்கம் உள்ளூராட்சி அதிகார சபையில் ஒரு தமிழர் நியமனம் செய்யப்படவேண்டும் என்ற தமது பிரேரணையைப் பிரேரித்தார். சுன்னாகம் பட்டின சபை உறுப்பினர் திரு. ஆசீர்வாதம் ஹென்றி மேற்படி பிரேரணையை ஆமோதித்து பிரேரணையில் முக்கியமாக்குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதியான தற்போதைய சபையில் உள்ள ஐந்து அங்கத்தவர்களில் ஒருவர் வாபஸ்பெற்று அதில் ஒரு தமிழர் நியமனம் செய்யப்படவேண்டும் என்றதை ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

பிரேரணைமீது பேசிய சிங்களப் பிரதிநிதிகள் தற்போதைய சபையில் இருந்து ஒருவரை வாபஸ் பெற்று அவ்விடத்துக்கு ஒரு தமிழரை நியமிக்கமுடியாது என்றே அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

எல்லோருடைய அபிப்பிராயங்களும் முடிந்ததும் சமாசத் தலைவர் திரு பாஸ்குவல் தாம் முன்பு கூறிய அதிகாரசபையில் நியமிக்கப்படவேண்டிய ஐந்து உறுப்பினர்களின் பெயர்களை வாசித்துக் காட்டினார். அதில் தமிழர் ஒருவராக இருப்பவர், காங்கேசன் துறை முன்னாள் பட்டின சபைத் தலைவர் திரு. சதாசிவம்.

இந்த நேரத்தில் திரு, ஆசீர்வாதம் ஹென்றி பிரேரணையில் குறிப்பிட்டவற்றைத் தலைவருக்குச் சுட்டிக் காட்டினார்.

தலைவர் அவற்றை ஏற்க முடியாது என்றுதிட்டவட்டமாகச் சபைக்கு தெரிவித்தார்."

புங்குடுதீவு ஸ்ரீமன் கத்தோலிக்க பாடசாலைக்கு புங்குடுதீவு அமெரிக்கன்மிஷன் வித்தியாசாலை ஆசிரியர் திரு சு யோ பூராசா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புங்குடுதீவு ஸ்ரீமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர் திரு எஸ். அன்ரனி, புங்குடுதீவுமகாவித்தியாலயத்துக்கு மாறிச்சென்றுள்ளார்.

வேலணைமத்தியமகாவித்தியாலயத்துக்கு புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியை திரு. வி. ஈஸ்வரியும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திரு விஜயரத்தினமும் மாற்றலாகியுள்ளனர். வேலணை மத்திய மகாவித்தியாலய விஞ்ஞான ஆசிரியர் திரு கே மயில்வாகனம் புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### கட்சிக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் சமஸ்தானாதிபதிகளின் ராஜமான்யம் மற்றும் அதிகாரங்களை ரத்துச் செய்யும் மசோதா கொண்டு வரப்பட்டபொழுது கட்சிக் கொறடாவின் கட்டளையை மீறிஇவர்கள் நடந்துகொண்டார்கள் என்பதாலேயே இந் நடவடிக்கையை காங்கிரஸ் கட்சித் தலைவி எடுத்துள்ளார்.

கட்சிக் கொறடாவின்கட்டளையை மீறியதற்காக ஏன் இவர்களை கட்சியிலிருந்து நீக்கக்கூடாதென்பதற்குரிய காரணங்களை 14 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்,

### 2-வது கொத்து...

[1-ம்பக்கத்தொடர்ச்சி]

பணம்கொடுத்து வாங்க வேண்டிய அரிசியை வாங்கினாலும்' வாங்காவிட்டாலும் இலவசமாகக் கொடுக்கப்படும் முதல் கொத்து அரிசியை எல்லோரும் பெறலாம் எனத்தெரியவருகிறது


REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Pre-Poya, Poya 4 Shows
Guiliano Gemma
in
ADIOS GRINGO


முத்தையா
-கவிதை

★

தித்திக்கும் தேன்நிலவோ
(பரிசுபெற்ற காவியம்)

★

செல்வம் தேடித் தரும்குப்பைகள்

★

'இறைவன் நகைக்கின்றான்'

★

கலைவாணர் நினைவுககு ஒரு கதம்பம்
-அ. செ. மு.

★

முனீஸ்வரத்தில் திருவிழா

★

கலாநிதி ஆனந்தக் குமாரசாமியின் நூல்கள்

★

அன்னையாம் கன்னி அவனியில் உதித்தநாள்

★

பாரதியின் நினைவு

★

யாழ். நகரில் நாடக விழா

★

மற்றும் குடும்பச் சுடர் மாணவர் மலர், கலையரங்கம், 'ஐயாறன்' அரசியல் அரங்கு, வாரபலன் முதலிய அம்சங்களுடன் நாளை வெளிவரும் 'ஈழநாடு' வாரமலர் உங்களுக்கு விருந்தளிக்கும்.

யுத்தநிறுத்தம் மீறல்

# நிக்சனுடன் பேச இஸ்ரேல் பிரதமர் அமெரிக்காவிஜயம்

ஜெருசலம், பெப். 6

அக்டோபர் மாதம் அமெரிக்க 25-வது ஆண்டு விழாவில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா செல்லவிருந்த இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டாமெயர் தமது விஜயத்தை திட்டமிட்டதற்கு முதலே மேற்கொள்ளவிருக்கிறார். இத்தகவலை அவர் நேற்று வெளியிட்டார்.

யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி ஜனாதிபதி நிக்ஸனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே அவர் தமது விஜயத்தைமுன்போட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. நிக்சனைச் சந்திப்பது பற்றி திருமதி மெயர் எதுவும் கூறவில்லை.

### எகிப்து மீறவில்லை என மறுப்பு

சூயஸ் கால்வாய் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை எகிப்து மீறிவிட்டதாக அமெரிக்கா தெரிவித்திருந்த குற்றச்சாட்டை எகிப்து மறுத்துள்ளது.

சூயஸ்கால்வாயின் கிழக்குப் பகுதியில் இஸ்ரேல் யுத்தத்தில் ஈடுபட்டதாகவும், இஸ்ரேல்தான் இந்த ஒப்பந்தத்துக்குமுரணாக நடந்திருக்கிறதென்றும் எகிப்தின் வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எகிப்துதான் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

எகிப்தும், இஸ்ரேலும பரஸ்பரம் இவ்வாறுகுற்றஞ்சுமத்திக்கொண்டிருக்கும் வேளையில், யுத்த நிறுத்தப் பிராந்தியமான சூயஸ்கால் வாய்ப்பகுதியில் தற்போதுள்ள நிலைமைபற்றிய தகவல்களை வெளியிடும்படி மாஸ்கோவையும், கெய்ரோவையும் அமெரிக்கா கேட்டிருக்கிறது.

## வேலைக்கு ஆபத்து

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களக் களஞ்சியங்களில் காவல் வேலை செய்யும் 12 இளைஞர்கள் வேலையிழக்கவேண்டிய நிலைஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பன்னிரண்டு இளைஞர்களும் களஞ்சியக் காவல் வேலைசெய்துவருகிறார்கள். இப்பொழுதுமொத்தம் 18 பேரை நாட்சம்பள அடிப்படையில் தெரிவு செய்ய முயற்சி நடைபெறுகிறதாம், இவர்களும் தொழில் இணைப்பு அலுவலகத்தினூடாகத்தோற்றினால் தான் இவர்களையும் கவனிக்க முடியும் என்று அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளாராம். அவர்கள் தற்பொழுது வேலையில் இருப்பதால் அவர்களுக்கு அட்டை வழங்கி நேர்முகத் தேர்வுக்கு அனுப்ப முடியாதெனத் தொழில் ஆணையாளர் கூறினாராம்.

இதுபற்றி மகஜர்களும் சருக்கும் ஆட்சிமன்ற அமைச் உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாம்,

......

## விவசாயப்படை வீரர்கள் மகஜர்

உடுப்பிட்டி, ஞாயிறு

"கடந்த ஜூலை மாதம் தொடக்கம் கலைக்கப்பட்ட விவசாயப்படை முகாம்களில் பணிபுரிந்த விவசாயப்படை வீரர்களுக்கு 2 மாத ஊதியமும், பொறியியலாளர்களின் கீழ் வேலைகளும் வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டிருந்தும், இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. சம்பளமும் இன்றி, வேலையும் இன்றி அல்லற்படும் விவசாயப்படை வீரர்களின் கதி பற்றி அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது ஏன்? மக்கள் அரசாங்கம் இவ்விஷயங்ளில் அதிக அக்கறை காட்டி, உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம்."

இவ்வாறு கோரும் மகஜர்களை விவசாயப் படையில் வேலைசெய்து தற்போது வேலையின்றி இருக்கும் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த விவசாயப்படை வீரர்கள் பிரதமருக்கும், நீர்ப்பாசனம், பெருந்தெரு அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவுக்கும் அனுப்பிவைத்துள்ளனர்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலு[illegible] [illegible] அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் [illegible] வெளியிடப்பட்டது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org